பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 10 புதன்கிழமை 25.11.2020 கதிர் 20

### இது ரகசியம் அல்ல!

இப்பத்தியில் நேற்று நான் குறிப்பிட்ட – விஜயகுமாரதுங்கவை விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் வரவேற்ற – சம்பவம் தொடர்பில் சில திருத்தங்களை அந்த விவகாரத்தில் நேரடியாகத் தொடர்புபட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ்.மாவட்டப்

பக்கம் 02 »

# போர்க்குற்றம் இடம்பெறவில்லை என்றால் சர்வதேச விசாரணைக்கு தயங்குவது ஏன்?

## நாடாளுமன்றில் ராஜபக்ஷ அரசிடம் கஜேந்திரகுமார் எம்.பி.கேள்விக்கணை



இலங்கையின் இறுதிப் போரில் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்றால், அரசு சர்வதேச விசாரணையை அனுமதிக்கத் தயங்குவது ஏன் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.

இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்பதை உலகமே ஏற்றுக்கொண்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

சர்வதேச பணத்தைப்

பக்கம் 02 »

# மாவீரரை நினைவேந்தும் எம்.பிக்களின் பதவிகளை உடன் பறிக்கவேண்டும் அரசு

## சுமந்திரனை உதாரணம் காட்டி நாடாளுமன்றில் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர வலியுறுத்து

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயிரிழந்த உறுப்பினர்களை நினைவுகூரும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர சபையில் அரசிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு – செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

பக்கம் 02 »

### வடக்கு, கிழக்கில் மாத்திரம்

## நினைவேந்தலை மறுக்கும் கோட்டாவின் கோமாளி அரசு

### மனோ எம்.பி. கடும் சீற்றம்

இலங்கையில் 1971இல் உயிரிழந்தவர்களை ஏப்ரல் மாதத்தில் 'விரு தின' என்றும், அதேபோல் 1989இல் உயிரிழந்தவர்களை நவம்பர் மாதத்தில் 'இல் தின' எனவும்

பக்கம் 11 »

## தாண்டவமாடும் 3ஆம் அலை 33 நாள்களில் 81 பேர் மரணம்

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் கடந்த 33 நாள்களில் மாத்திரம் 81 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பக்கம் 02 »

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு இப்போதைக்கு மீட்சி இல்லை

### போதைப்பொருள் கைதிகள் 6,334 பேருக்கு எதிரான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை

சிறைச்சாலைகளில் காணப்படும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் 6 ஆயிரத்து 334 கைதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதில் எவரும் தமிழ் அரசியல்

பக்கம் 11 »

## பிள்ளையானுக்கு மட்டும்தான் பிணை அரசியல் கைதிகளுக்கு ஏன் இல்லை?

### சபையில் சார்ள்ஸ் எம்.பி. கேள்வி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பிள்ளையானுக்கு பிணை வழங்க முடியும் என்றால் எந்தவித சாட்சியும் இல்லாது வெறுமனே குற்ற ஒப்புதல்

பக்கம் 02 »



## பிள்ளையானுக்கு பிணை அனுமதி! மட்டு. நீதிமன்று நேற்று வழங்கியது

(விவரம் 12ஆம் பக்கத்தில்...)

# நல்லூர் கோவில் வீதியில் வசிக்கும் பெண்ணொருவருக்குக் கொரோனா

### காங்கேசன்துறை கடற்படையினர் இருவருக்கும் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நல்லூரில் 72 வயதுடைய பெண்ணொருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பரிசோதனைக்கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

பக்கம் 02 »

## கொரோனா சாவு 94 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர். மூன்று ஆண்களும், ஒரு பெண்ணுமே

பக்கம் 02 »

## பொலிஸ் கொத்தணி 1,039 ஆக அதிகரிப்பு

### சிறைக் கொத்தணி 717 ஆக உயர்வு

இலங்கையில் கொரோனா வைரஸ் மூன்றாவது அலையின் தாக்கத்தால் இதுவரை 1,039 பொலிஸார் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 02 »

## ஓயாமல் அடிக்கும் கொரோனா நேற்றும் 459 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்றும் 459 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 967 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 5 ஆயிரத்து 911 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று

பக்கம் 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேச்சாளர் ரஹீம் (ஸ்ரீகுமார் கனகரத்தினம்) கனடா நாட்டிலிருந்து வேறு ஒரு நண்பர் ஊடாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது சுமார் முப்பத்தியைந்து வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம். வேறு எந்த ஆதாரங்களோ, தகவல்களோ, பதிவுகளோ இல்லாமல் வெறுமனே என் நினைவில் நின்றவற்றை மட்டுமே கொண்டு நேற்று இப்பத்தியை வரைந்திருந்தேன்.

இப்போது ரஹீம் அவர்கள் சுட்டிக்காட்டிய மற்றும் என் நினைவில் வைத்து மீட்டுக் கொள்ளக் கூடிய தகவல்களை மட்டும் வைத்து, நேற்றைய தகவல்களில் சில திருத்தங்களைச் செய்கிறேன்.

01.அன்று விஜயகுமாரதுங்கவுடன் யாழ் வந்தவர்களில் ஒருவர் ஒளி அபேகுணசேகரா. இன்னொரு அரசியல் பிரமுகரும் வந்திருந்தார். அவர் குமாரதுங்கவின் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஜா – எலப் பகுதி அமைப்பாளரும் பின்னாளில் அமைச்சராகவும் இருந்த அமரர் பீலிக்ஸ் பெரேரா.

02.இவர்களோடு நான்காவது நபராக ஒருவர் வந்திருந்தார் – இந்த மூவரணியின் படப் பிடிப்பாளரான அவரையே பொலிஸ் புலனாய்வாளர் என்று புலிகள் பின்னர் கண்டு பிடித்து, விஜய குமாரதுங்கவிடமே அதனை அம்பலப்படுத்தினர். அவர்களின் அந்த வருகைப் படத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன். அதில் இடமிருந்து வலமாக சர்ச்சைக்குரியந்தப் படப்பிடிப்பாளர், ஒளி அபேகுணசேகரா, தளபதி கிட்டு, விஜயகுமாரதுங்க, பீலிக்ஸ் பெரேரா, புலிகள் பேச்சாளர் ரஹீம் (ஸ்ரீகுமார் கனகரத்தினம்)

உயிரிழந்தார் எனத் தெரிவித்து, அவருக்கு இராணுவப் பதவி நிலையும் கொடுத்து, அஞ்சலியும் செய்திருந்தனர் புலிகள். அதனால் அவர் இறந்து விட்டார் என்று நம்பிய அரசுப் படைகள், தம் வசம் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் சாதாரண புலிப் போராளி என்று கருதி அருணாவை விடுவித்த சம்பவம் அரங்கேறியது.

இதன் பின்னர், 1989 கடைசியில் யாழ். நகரப் பகுதியில் இந்தியப் படைகளுடன் நடந்த மோதலில் தளபதி அருணா வீரமரணமடைந்தார். தளபதி கிட்டுவின் தீவிர விசுவாசியான அருணா யாழ்ப்பாணத்தில் தளபதி கிட்டுவின் ஒரு கால் பறிபோன கிரனேட் தாக்குதலன்று அச்சம்பவத்தினால் உணர்ச்சி வசப்பட்டு மேற்கொண்ட நடவடிக்கை வரலாற்றில் மிகப் பெரும் துயரான சம்பவம். இப்போதைய விடயங்களுக்கு அது தொடர்பற்றது. அதனால் விட்டு விடுகிறேன்.

பலாலித் தடுப்பிலிருந்து அருணாவை சாதாரண போராளி போல காட்டி விடுதலைப் புலிகள் விடுவித்த அன்று, நல்லூருக்கு முன்னால், பருத்தித்துறை வீதியில் இருந்த ஒரு தொடர்பு அலுவலகத்தில் அவரையும், அவருடன் விடுவிக்கப்பட்ட மற்றைய பேராளியையும் சந்தித்து உரையாடி, செய்தி வரைந்தமை முப்பத்தியைந்து ஆண்டுகள் கழித்தும் எனக்கு மனதில் ஒளிப்படமாக ஓடுகின்றது.

பின்னாளில் – 1988 முற்பகுதியில் – இந்தியாவில் சென்னை திருவான்மியூரில் விட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த கிட்டுவை, பாதுகாப்பு அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, சாதாரண புலிப் போராளி போல பாசாங்கு பண்ணி



03.யாழ்.வைமன் வீதி இல்லத்தில் தளபதி கிட்டு – விஜயகுமாரதுங்க பேச்சு நடந்த இடத்தில் வடை, தேநீர் உபசாரமே குமாரதுங்க அணிக்கு வழங்கப்பட்டது. உணவு விருந்துபசாரம் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இருந்த றொலக்ஸ் ஹோட்டலிலேயே அளிக்கப்பட்டது.

04.புலிகளின் காவலில் இருந்த படையினர் இருவரில் ஒருவர் 2ஆவது லெப்படினண்ட், மற்றவர் சிப்பாய். யாழ். வைமன் வீதி இல்லத்தில் (பின்னாளில் அது 'ஈழநாதம்' அலுவலகமாக மாறியது) அந்த இருவரையும் குமாரதுங்க அணி சந்தித்துச் சென்ற அன்று அந்த இருவரும் விடுவிக்கப்படவில்லை. ஆனால் அந்த இருவரும் விடுவிக்கப்படுதற்கான பூர்வாங்க ஏற்பாடு அப்போதுதான் நடைபெற்றது.

05.அதன் பின்னர் – விஜயகுமாரதுங்க தரப்பு ஆரம்பித்து வைத்த தொடர்பாடல் மூலம் – கைதிகள் பரிமாற்ற முறையில் அந்த இருவருக்கும் விடுவிக்கப்பட்டனர்.

ரஹீமும் மற்றவர்களும் அந்த இருவரையும் யாழ்.கோட்டை முகாம் வாசலில் வைத்து விடுதலை செய்து படையினரிடம் அனுப்பிய அதே நேரம், அரசுப் படைகளும் தமது காவலில் இருந்த இரு புலிகளை வயாவிளான் போர் எல்லைப் பகுதியில் வைத்து விடுவித்தன. தளபதி கிட்டு தலைமையிலான அணி தமது எல்லையில் வைத்து அந்த இருவரையும் பொறுப்பேற்றது. புலிகளின் சாதாரண போராளிகள் இருவரை விடுவிப்பதாக நினைத்து இருவரைப் படையினர் விடுவித்தனராயினும், அந்த விடுதலை நிகழ்வுக்குப் பின்னர்தான், அப்படி விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவர் புலிகளின் தளபதி அருணா என்பது அம்பலமாகியது.

உண்மையில், மேற்படி புலிகள் இருவரும் ஒரு கடல் தாக்குதலில் கைது செய்யப்பட்டனர் என்பது என் நினைவு. அந்தத் தாக்குதலில் புலிகளின் தளபதி அருணா

நான் உள்நுழைந்து, ஒரு நாள் முழுவதும் அவருடன் அந்த வீட்டுக்காவல் இல்லத்தினுள் தங்கி நின்று, அவரைப் பேட்டி கண்டு, படம் எடுத்து வந்து, 'ஜூனியர் போஸ்ட்' வார இதழின் முதலாவது பிரசுரத்துக்கு அதனை விசேட பேட்டியாக முதல் பக்கத்தில் வெளியிட்டமை வரை நினைவில் நிழலாடுகின்றன. அத்துணை அற்புதமான நண்பர் கிட்டு. 37 வருடங்களுக்கு முன்னர் ஒரு நல்ல பத்திரிகை நண்பராக என்னை அடையாளம் கண்டு வரித்தவர் அவர். அதுவே விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள் நான் அதீத செல்வாக்குக் கொண்ட ஊடகவியலாளனாக உயர வழிசமைத்தது.

வாய்ப்பு வரும் போது பொருத்தமான சமயங்களில் வாசர்களோடு அவற்றைப் பகிர்வேன்.

நான் நேற்று வரைந்த தகவல்களில் உள்ள சில தவறுகளைத் திருத்துவதற்காகவே இந்தப் பதிவு – வரலாறு தவறாகப் பதிந்து, விடக் கூடாது என்பதற்காக.

நேற்று விடப்பட்ட தகவல் தவறுகளுக்காக வருந்துகிறேன். வாசர்கள் இத்திருத்தங்களை கவனத்தில் கொள்வார்களாக.

– மின்னல் –

## பிள்ளையானுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்குமூலத்துடன் 20 ஆண்டுகளாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்ட எமது தமிழ் இளைஞர்களை ஏன் பிணையில் விடுவிக்க முடியாது?

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய மரபுரிமைகள், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

சந்திரகாந்தன் எனும் பிள்ளையான் பயங்கரவாதத் தடைச் சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், அவர் சாட்சி இல்லாமல் சிறையில் இருந்துள்ளார் என்ற தர்க்கத்தை அரச தரப்பினர் முன்வைக்கின்றனர்.

இவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், எமது இளைஞர்கள் சாட்சிகள் இல்லாது வெறும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் 20 வருடங்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதனையும் அனைவரும் மறந்துவிடக்கூடாது. பிள்ளையானுக்குப் பிணை கொடுக்க முடியும் என்றால் 20 வருடங்களாக சிறையில் உள்ள எமது அரசியல் கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்தவர்களுக்குப் பிணை வழங்க முடியாது என அரச தரப்பினர் எம்மிடம் கூறினார்கள். அப்படியென்றால் பிள்ளையான் எவ்வாறு பிணையில் விடுதலையாக முடியும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் எமது தமிழ் இளைஞர்கள் பொய்க் குற்றச்சாட்டில் வெறுமனே குற்ற ஒப்புதல் சாட்சியங்களை வைத்துக்கொண்டு தடுத்து வைத்திருப்பது நியாயமானதா? இது வெறுமனே அரசின் நிகழ்ச்சி நிரலில் நடைபெறும் செயற்பாடாகும். அரசை ஆதரித்த காரணத்தால்தான் பிள்ளையான் பிணையில் விடுதலையாகியுள்ளார் –என்றார்.

## நல்லூர் கோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த 11ஆம் திகதி கொழும்பிலிருந்து நல்லூர் கோவில் வீதிக்கு வந்து சுகாதாரப் பதிவு ஒன்றுக்கும் உட்படாத நிலையில் இருந்த பெண்ணொருவர் சுகாதார அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சில நாட்களுக்கு முன்னர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், நேற்று அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் காங்கேசன்துறை கடற்படைத் தளத்தைச் சேர்ந்த கடற்படையினர் இருவருக்கும் நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார்.

## போர்க்குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர் எனவும், போர்க்குற்றங்கள் நடந்துள்ளதாக பொய்யான கருத்துக்களை அவர்கள் வெளியிட்டு வருகின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதன்போது, ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நீங்கள் போர்க்குற்றம் செய்யவில்லை என்றால், உங்கள் நிலைப்பாட்டை உறுதியாக நியாயப்படுத்த முடியும் என்றால், அதற்கான ஆதாரங்கள் உங்களிடம் உள்ளன என்றால் நீங்கள் சர்வதேச விசாரணையை அனுமதிக்கத் தயங்குவது ஏன்? என்று கேள்வி எழுப்பினார்.

அத்துடன், நீங்கள் எங்களுடன் வாதாடுவதைத் தவிர்த்து, உங்களின் நியாயத்தை விசாரணைகளின் மூலமாக நிரூபித்துக்காட்டுங்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இறுதிப் போரின்போது, தான் நாட்டில் இருந்தார் எனவும், அப்பாவி மக்களைக் கொலைசெய்ய வேண்டாம் என அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மேலும் கூறினார்.

## தாண்டவமாடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் ஒக்டோபர் 22 வரையான சுமார் 8 மாத காலப்பகுதியில் கொரோனாவால் 13 பேரே உயிரிழந்திருந்தனர். ஒக்டோபர் 31ஆம் திகதியாகும்போது மரண எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது.

எனினும், கடந்துள்ள 24 நாட்களில் மாத்திரம் 70 பேர் உயிரிழந்துள்ளனர். நாளாந்தம் கொரோனா மரணங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. கொழும்பு மாவட்டத்திலேயே அதிக மரணங்கள் பதிவாகியுள்ளன. அங்கு கடந்த 23 நாட்களில் 52 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் கொரோனா 3 ஆவது அலை மூலம் நேற்று வரை 17 ஆயிரத்து 433 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. இதில் 3 ஆயிரத்து 59 பேர் மினுவாங்கொட கொத்தணியுடன் தொடர்புபட்டவர்கள். ஏனையோர் பேலியகொட கொத்தணி பரவலில் சிக்கியவர்கள்.

அதேவேளை இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதல் நேற்று நள்ளிரவு வரை 20 ஆயிரத்து 967 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது. இவர்களில் 14 ஆயிரத்து 962 பேர் குணமடைந்துள்ளனர். 94 பேர் உயிரிழந்துள்ளனர்.

## ஓயாமல் அடிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றனர் எனவும், 14 ஆயிரத்து 962 பேர் குணமடைந்து வீடு சென்றுள்ளனர் எனவும், 94 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## கொரோனா சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களில் இருவர் 70 வயதைக் கடந்தவர்கள்.

கொழும்பு 15, கினிகத்தேன, பண்டாரகம, சிலம் பலாபே ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்துள்ளது.

## பொலிஸ் கொத்தணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் 238 பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் உள்ளடங்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலைகளில் இருந்து பதிவான மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 717 ஆக உயர்வடைந்துள்ளது.

கொழும்பை அண்டிய சிறைகளில் மேலும் 35 கொரோனா நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 717 ஆக அதிகரித்துள்ளது எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

## மாவீரரை நினைவேந்தும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத்தில் இருக்கும் சில தமிழ் எம்.பிக்கள் சிங்களவர்களுக்கு எதிராகத் தமிழ் மக்களைத் தூண்டும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அன்று தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதற்கு இவ்வாறான கருத்துக்களே காரணமாக அமைந்தன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்தநிலையில், நாட்டில் மீண்டும் பயங்கரவாதநிலைமை உருவாகுமாக இருந்தால் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வரும் தமிழ் எம்.பிக்களே அதற்குப் பொறுப்பானவர்களாக இருப்பார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலும் எம்.பி. ஒருவர் (சுமந்திரன்) உயிரிழந்த விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரை நினைவுகூர்ந்துள்ளார். இதனூடாக அந்த எம்.பி. பிரிவினையை ஏற்றுக்கொள்கின்றார் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இதற்கமைய தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவுகூருபவர்களின் எம்.பி. பதவியை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன் – என்றார்.

## வெளிநாட்டுப் பயணத் தடை பஸிலுக்கு இனிமேல் இல்லை

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவுக்கு விதிக்கபட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையைக் கொழும்பு மேல் நீதிமன்றம் நீக்கியுள்ளது.

அத்துடன் இவருக்குப் பிணை வழங்கப்பட்டபோது விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் ஒன்றான மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குற்றப்புலனாய்வு திணைக் களத்தில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையும் நீதிமன்றத்தால் நீக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது, திவிநெகும அபிவிருத்தி திணைக் களத்துக்குச் சொந்தமான நிதியை முறைக்கேடாகப் பயன்படுத்தினார் என்று அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் அவருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவரின் வெளிநாட்டுப் பயணத் தடையையும், மூன்று மாதத்துக்கு ஒரு தடவை குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனைகளையும் நீக்குவதற்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணை இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இடர்காலப் பாதிப்பின்போது விசேட ஏற்பாடு

### கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தகவல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , நவ.25

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா அச்சம் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படுமாயின் அவர்களுக்கான மாற்று ஏற்பாடாக பாதுகாப்பான பகுதி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற இடர் முகாமைத்துவ கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் விவரம் தெரிவிக்கையில் –

மாவட்டத்தில் பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் மக்களை இடர்களிலிருந்து பாதுகாப்பது மற்றும் தற்போது உள்ள கொவிட் தொற்றுக் காலப்பகுதியில் இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எவ்வாறு பாதுகாப்பாக நடந்துகொள்வது என்பன தொடர்பில் விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய் கொவிட் – 19 நெருக்கடிச் சூழலில் எவ்வாறு இந்த அனர்த்தங்களிற்கு முகம் கொடுப்பது என்பது தொடர்பில் குறித்த திணைக்களங்களுடன் நாம் கலந்துரையாடியிருந்தோம். அனர்த்தத்தின் பொருட்டு அதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு அனைத்துத் தரப்பிடமும் கூறியிருக்கின்றோம்.

வழக்கத்தக்கு மாறாக முகாம்களிலே மக்கள் தங்க வைக்கப்படும் நிலை ஏற்படும்போது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அனர்த்த சூழ்நிலைக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பதையும் நாங்கள் உணர்த்தி இருக்கின்றோம்.

வெள்ள அனர்த்தம் ஏற்படுகின்றபோது பொதுவாக பாடசாலைகளில், பொது மண்டபங்களில் மக்களைத் தங்க வைப்பது வழக்கம். அதற்கு அமைவாக தங்க வைக்கின்ற பகுதிகளை இம்முறை அதிகரித்திருக்கின்றோம். அதுமட்டுமல்லாது இடர் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பாதுகாப்பான இடமாகக் கருதக்கூடிய உறவினர்களது வீடுகளில் தங்கியிருப்பது பொருத்தமானது என்பதை மக்களிடமும் பிரதேச செயலாளர்களிடமும் நாங்கள் கூறியிருக்கின்றோம்.

உறவினர்கள், நண்பர்களது வீடுகள் பாதுகாப்பான இடமாக கருதுவீர்களானால் அங்கு தங்கிருப்பதே பாதுகாப்பானது என்பதை மக்களிடம் தெரிவிக்கும் அதேவேளை மக்கள் தங்கக்கூடியதான முகாம்களையும் நாங்கள் அதிகரித்திருக்கின்றோம் .

தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்கள் வெள்ள அனர்த்தத்திற்கு உட்படுவார்களாக இருந்தால் அவர்களைத் தனிமையாக வேறு இடங்களில் தங்கவைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைவாக கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட தர்மபுரத்திலே ஒரு பொது மண்டபத்தினை இதற்காக நாங்கள் தெரிவு செய்து வைத்துள்ளோம். -- என்றார்.

இக்கலந்துரையாடலில் மாவட்டச் செயலக அதிகாரிகள், சுகாதார திணைக்களத்தினர், பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தார்கள்.

## மைத்திரிபால மீது நேற்று 8 மணிநேரம் விசாரணை

### இன்றும் தொடரும்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இன்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிடையான நிலையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை ஆணைக்குழுவில் முன்னிலையாகி 8 மணிநேரம் வாக்குமூலம் வழங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக பல்வேறு தடவைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகியங்கனையில் இருந்து வியாழன் தோறும் மன்னார் வரும் யாசகர்களை மடக்கத் திட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.25

வாராந்தம் யாசகம் பெறுவதற்காக வியாழக்கிழமைகளில் மகியங்கனையில் இருந்து மன்னார் மாவட்டத்திற்கு வரும் யாசகர்களை படையினர் மற்றும் பொலிஸார் மூலம் மடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 'கொவிட் – 19' தடுப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயமும் தீர்மானிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் மகியங்கனையில் இருந்து 40ற்கும் மேற்பட்ட யாசகர்கள் காலையில் வந்திறங்கி சகல வர்த்தக நிலையங்களிற்கும் ஏறி இறங்கி யாசகம் பெற்றுச் செல்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

கொரோனா அச்சம் குறைவடையும் வரையில் இச்செயலை தடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு தடுப்பதற்காக வியாழக்கிழமை சுகாதார அதிகாரிகள், பொலிஸார், படையினரின் உதவியை நாடவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸார், பிரதேச செயலாளர்கள், படையினர் என சகல தரப்பினரும் பங்கு கொண்டிருந்தனர்.

## மன்னாரில் ஒரு பகுதி ஆசிரியர்களுக்கு அதிர்ஷ்டமாகக் கிடைத்த மாத வேதனம்

### மீள அறவிடுவதற்கு நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , நவ.19

மன்னார் மாவட்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினருக்கு ஒக்டோபர் மாத சம்பளத்தில் அதிஷ்டம் கிட்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள இரு கல்வி வலயங்களில் ஒன்றான மன்னார் கல்வி வலயத்தில் பணியாற்றும் சுமார் ஆயிரத்து 500 ஆசிரியர்களிற்கான ஒக்டோபர் மாத சம்பளத்திற்கான காசோலைகள் உரிய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்வாறு அனுப்பிய காசோலைகளில் ஓர் அரச வங்கியில் கணக்கை பேணும் ஆசிரியர்களிற்கே இந்த அதிஷ்டம் கிட்டியுள்ளது. குறித்த வங்கியானது சகல ஆசிரியர்களிற்கும் அவர்களின் சம்பளக் கொடுப்பனவை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் வரவு வைத்துள்ளனர். இதனால் பல ஆசிரியர்கள் இரண்டு தடவையும் சம்பளமாகப் கருதி பணத்தைத் தங்களின் கணக்கில் இருந்து எடுத்துள்ளனர்.

குறித்த விடயத்தை வங்கி தற்போது அவதானித்து, மேலதிகமான பணத்தை மீளப் பெறாமல் கணக்கில் வைத்திருந்தவர்களது கணக்கில் இருந்து பணத்தை மீளப் பெற்றது. கழிக்க முன்னர் பணத்தை எடுத்துக் கொண்டவர்களின் நவம்பர் மாத சம்பளத்தில் இருந்து மேலதிகமாகப் பெற்ற பணத்தைக் கழிப்பதற்கும் அனுமதியை பெற்றனர்.

## பொலிஸ் போதை தடுப்பு பணியக அதிகாரிகள் 13 பேருக்குத் தொடர்ந்தும் விளக்க மறியல்!

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பணியகத்தில் பணிப்புரிந்த 13 அதிகாரிகளும் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கொழும்பு பிரதம நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த 13 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குருகுலம் தமிழ்மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 25.11.2020 | புதன்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 - | தரம் 12. உயிரியர் (சி) |
| 05.00 - 05.55 - | தரம் 13. உயிரியல் (சி) |
| 06.00 - 06.55 - | தரம் 10. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் (த) |
| 08.00 - 08.55 - | தரம் 10. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் (த) |
| 09.00 - 09.55 - | தரம் 11. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் (த) |
| 10.00 - 10.55 - | தரம் 10. தமிழ் |
| 11.00 - 11.55 - | தரம் 11. தமிழ் |
| 12.00 - 12.55 - | தரம் 12. கணக்கீடு (த) |
| 13.00 - 13.55 - | தரம் 13. கணக்கீடு (த) |
| 14.00 - 14.55 - | தரம் 11. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் (த) |
| 15.00 - 15.55 - | தரம் 10. கணிதம் (த) |
| 16.00 - 16.55 - | தரம் 11. கணிதம் (த) |
| 17.00 - 17.55 - | தரம் 13. தொழிநுட்பத்துக்கான விஞ்ஞானம் (த) |
| 18.00 - 18.55 - | தரம் 12. தொழிநுட்பத்துக்கான விஞ்ஞானம் (த) |
| 22.00 - 23.00 - | தரம் 13. அரசியல் விஞ்ஞானம் (த) |
| 23.00 - 14.00 - | தரம் 12 அரசியல் விஞ்ஞானம் (த) |

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நினைவேந்தல் விவகாரத்தில் குழப்பகரமான நிலைப்பாடுகள்!

இலங்கைத் தமிழர்களின் உணர்வோடும் உள்ளத்தோடும் பிணைந்து விட்ட மாவீரர் தின நினைவேந்தல் நாள் நெருங்குகின்றது. நாளை மறுதினம் அந்நாள். தங்கள் உறவுகளை நினைவேந்தல் செய்வது எங்ஙனம் என்ற குழப்ப நிலையில் தாயகத் தமிழர்கள் உள்ளனர். தமிழ் மக்களின் தலைவர்களும் தீர்க்கமான ஒரு முடிவை இக்கணம் வரை எடுக்கவில்லை. பெரும்பாலும் இன்று நீதிமன்ற முடிவுகளைப் பார்த்து, மாலையில் கூடி அவர்கள் முடிவேதும் எடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசுத் தரப்பும் கூட – பாதுகாப்புத் துறையினர் பக்கத்திலும் கூட – இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பதில் குழப்பம் நீடிப்பதாகவே தோன்றுகின்றது.

தமிழர்கள் ஒன்று கூடி நினைவேந்துவதற்கு அனுமதிக்கக் கூடாது என்ற பேரினவாதச் சிந்தனையில் அரசுத் தலைமை உறுதியாகவிருக்கின்றது என்பது தெளிவு.

ஆனால் தன்னுடைய அந்தத் தீர்மானத்தை எப்படிச் செயற்படுத்துவது என்பதில் அதிகாரத் தரப்புக்குள் குழப்பம் நீடிப்பதாகவே தெரிகின்றது. இவ் விடயத்தைக் கையாள்வது தொடர்பில் அதிகார மட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள், நடவடிக்கைகள் பெருங் குழப்பகரமாகவே இருக்கின்றமை அவதானிக்கப்படுகின்றது.

நினைவேந்தலுக்குத் தடை விதிக்க முற்படும் அதிகாரத் தரப்பின் நடவடிக்கைகளுக்கு தடையீட்டு ஆணை வழங்கும்படி கோரி யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது அதனை எதிர்த்து வாதாட கொழும்பு ஆட்சிப்பீடம், சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விசேட அதிகாரிகளை தனியான ஹெலிக்கொப்டர் ஒன்று வழங்கி பலாலி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தது. அந்த அணி மேல்நீதிமன்றத்தில் வாதாடி, இந்த விவகாரம் தேசியப் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டமையால் இந்த விவகாரத்தை மாகாண நீதிமன்றம் விசாரிக்க முடியாது என்ற தீர்ப்பையும் பெற்றுச் சென்றது.

ஆனால், அதேசமயம் நினைவேந்தல் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்குமாறு கோரி ஒவ்வொரு நீதிவான் நீதிமன்றத்திலும் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். சில நீதிமன்றங்கள் பொலிஸாரின் ஒரு தலைப்பட்ச வாதத்துடன் அத்தகைய தடை உத்தரவுகளை வழங்கின.

ஆனால், கோப்பாய் நீதிவான் நீதிமன்றம் தடை விதிக்க மறுத்து விட்டது. அதேநேரம் பொலிஸார் குறிப்பிடும் வகையிலான தவறுகளை இழைக்காமல் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு அது இணக்கமும் தெரிவித்துவிட்டது.

இதனையடுத்து, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றங்களும் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று ஒரு தலைப்பட்சமாக உத்தரவுகளை வழங்க மறுத்தமையுடன், அது குறித்து எதிராளிகளின் கருத்தை செவிமடுக்கவும், அதன் பின்னரே முடிவை வழங்கவும் தீர்மானித்து நின்றன.

இந்தச் சமயத்தில், இந்த விவகாரத்தை பாதுகாப்பு அமைச்சே இனி நேரடியாகக் கையாளும், அதனால் இவ்விவகாரத்தை ஒட்டி பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட – நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக்கோரும் – மனுக்கள் வாபஸ் பெறப்படுகின்றன எனப் பொலிஸாரால் நீதிமன்றுக்குத் தெரிவிக்கப்பட்டது. காங்கேசன்துறைப் பகுதிக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரால் தனது பிரிவுக்கு உட்பட்ட எல்லாப் பொலிஸ் நிலையங்களுக்கும் இப்படி அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனால், இனிமேல் இவ்விடயத்தை ஒட்டி நீதிவான் நீதிமன்றங்களில் மினக்கெடாமல்' அரசுத் தரப்பு நேரடியாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் மூலம் விவகாரங்களைக் கையாளும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அரசுத் தரப்புக்குள்ளும் இது விடயத்தில் குழப்பம் போலும். மீண்டும் நீதிவான் நீதிமன்றங்கள் மூலம் தடை உத்தரவைப் பெறும் முயற்சி முடுக்கி விடப்பட்டது.

பிரதி சொலிஸிட்டர் ஜெனரலே நேற்று நேரடியாக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் ஆஜராகி வாதிட்டார். அந்த நீதிமன்றின் முடிவு இன்று தெரியவரும்.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றமும் நேற்று விரிவான விசாரணையை நடத்தியுள்ளது. அதன் முடிவு 26ஆம் திகதி – நாளை – வெளிவரவுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றமும் தனது தீர்மானத்தை இன்று அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அங்கும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரலே இன்று முன்னிலையாகவிருக்கின்றார்.

அந்த முடிவுகள் வெளிவரும்போதுதான் பொதுவான சட்ட, நீதித்துறை நிலைப்பாடு யாது என்பது தெளிவாகும்.

அதன் பின்புதான் தமிழர் தரப்பு இவ்விடயத்தில் தனது அணுகுமுறை தொடர்பான உத்தியை வகுக்க முடியும்.

அதுவரையில் இரு தரப்புகளிலும் – பொலிஸார் மற்றும் சட்டமா அதிபர் உட்பட்ட அரசுத் தரப்பிலும், தமிழர் தரப்பிலும் – குழப்பகரமான நிலைமை நீடிக்கும். அது தவிர்க்க முடியாதது தான்.

## புதைப்பதா? எரிப்பதா? என்பது தொடர்பாக அலிசப்ரியின் கருத்து ஒரு தலைப்பட்சமானது!

### ஞானசார தேரர் தெரிவிப்பு



கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலைக் கொண்டு அரசியல்வாதிகள் அரசியல் செய்கின்றமையை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவரை புதைப்பதா, தகனம் செய்வதா என்ற விடயத்தில் நீதியமைச்சர் அலி சப்ரி குறிப்பிடும் கருத்துக்கள் ஒருதலைபட்சமானவை.

இவர் நீதியமைச்சர் மாத்திரமே தவிர, நாட்டு தலைவர் அல்லர், நெருக்கடியான சூழ்நிலையில் சிங்கள பௌத்த மக்கள் மத உரிமைகள் பலவற்றை விட்டுக் கொடுத்துள்ளார்கள். முஸ்லிம் சமூகத்தினர் நெருக் கடியான நிலையில் தங்களின் மத உரிமைகளைக் கோருகின்றமை முரண்பாடானது.

கொவிட் – 19 வைரஸ் தாக்தால் உயிரிழப்பவர்களின் உடலை வைத்து அரசியல்வாதிகள் அரசியல் செய்துகொள்கிறார்கள். சுகாதார தரப்பினர் விரைவாக முரண்பாடற்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும். – என்றார்.

## கோட்டாவுக்கு யாழ்.நீதிமன்று விடுத்த அழைப்பாணை ரத்து!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு யாழ் நீதிமன்றம் விடுத்த அழைப்பாணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் காணாமல் போனமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

யுத்தத்தின் பின் மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைத்து வந்த செயற்பாட்டாளர்களான இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை அடுத்து அந்த விசாரணைகள் யாழ். நீதிவான் நீதிமன்றததுக்கு மாற்றப்பட்டு சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகியிருந்த நிலையில் சாட்சியம் ஒன்றினை பெற்றுக்கொள்ள கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அந்த அழைப்பாணையை மேன்முறையீட்டு நீதிமன்று ரத்துச்செய்துள்ளது.

## ஆயுதங்களுடன் கைதான 6 இளைஞர்கள் மறியலில்!

வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் கைதான ஆறு இளைஞர்களையும் எதிர்வரும் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைதடி பாலத்துக்கு அருகில் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) வீதி சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தவேளை, அந்த வழியாக வந்த ஹயஸ் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை மறித்து சோதனையிட்டபோது அவற்றுள் வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் காணப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, வாகனங்களில் பயணித்த 6 பேரையும் கைது செய்த பொலிஸார் வாகனங்களையும் பறிமுதல் செய்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை இவர்களை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் பொலீஸார் முற்படுத்தினர். இதன்போது நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து ஆறு பேரையும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## வடக்கில் மாணவர்களின் வருகை 45 வீதத்தை எட்டவில்லை

**(ந.லோகதயாளன்)**

கொரோனா அச்சத்தின் பின்பு நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பித்தயில் வடக்கு மாகா ணப் பாடசாசாலைகளில் மாணவர்களின் வரவு நேற்றைய தினமும் 45 வீதத்தை தொட வில்லை என்றே அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டத்தின் 12 கல்வி வலயங்களிலும் உள்ள மாகாணப் பாடசாலைகளில் தரம் 6 முதல் உயர்தரம் வரையில் மொத்தமாக ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 855 மாணவர்கள் கல்வி கற்கும் போதும் நேற்று முன்தினம் 61 ஆயிரத்து 601 மாணவர்கள் மட்டுமே பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

இந்த நிலையில்நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தின் எந்தப் பாடசாலையும் இயங்காத காரணத்தினால் தற்கு வெளியில் எஞ்சிய ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 749 மாணவர்கள் கல்வி கற்கும்போதும் இன்றைய தினம் ஆக 56 ஆயிரத்து 67 மாணவர்கள் மட்டுமே பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

இவ்வாறு வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இது 44.59 வீதம் என மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித் தனர்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள்
அவற்றை வரட்சி,நோய்கள், பனிச் சரிவுகள்,ஆயிரமாயிரம்
சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில்
இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும்
அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.'
- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

# பல்கலைக்கழக வெட்டுப் புள்ளியில் மாணவர்களுக்கு அநீதி இழைப்பு!

## நுவரெலியாவில் பெற்றோர்கள் போராட்டம்





பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளியில் மாணவர்களுக்கு அநீதி இழைக் கப்பட்டுள்ளதாக கூறி நுவரெலியாவில் போராட்ட மொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முன்னெ டுக்கப்பட்டது.

பாடசாலைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நேற்று முன்னெடுக் கப்பட்டது.

இதன்போது, வெட்டுப்புள்ளிகளை நிர்ணயிக் கின்ற பொழுது உரிய நடைமுறை கடைபிடிக்கப்பட வில்லை என்பதை சுட்டிக்காட்டி போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தப் போராட்டம் தொடர்பாக பாட சாலைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் ராமராஜ் தெரிவித்துள்ளவை வருமாறு –

இறுதியாக நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையானது புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகவும் பழைய பாடத்திட்டத்துக்கு அமைவாகவுமே இரண்டு முறைகளில் நடைபெற்றது.

இதனடிப்படையில் வெட்டுப்புள்ளிகளை நிர்ணயிக்கின்ற பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை கடைபிடிக்கப்படவில்லை.

இவ்வாறான ஒரு நிலைமை 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொழுது அந்த சந்தர்ப்பத்தில் சரியான முறையைக் கையாண்டு, அதற்கான தீர்வு சரியான முறையில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த முறை அந்த முறை கடைபிடிக்கப் படவில்லை. அதிகாரிகள் தங்களுக்கு என்ன தோன்றியதோ அதனையே செய்திருக்கின்றார்கள். இதனால் பாதிக்கப்பட்டிருப்பது எங்களுடைய மாண வர்கள்.

இதன் காரணமாக சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்களுக்குச் செல்ல முடியாத ஒரு நிலைமை ஏற் பட்டுள்ளது.

மேலும் மாணவர்களை இணையத்தின் ஊடாகப் பதிவு செய்யுமாறு கேட்டிருக்கின்றார்கள். அனைவ ருக்கும் அந்த வசதி இருக்கின்றதா? என்பது ஒரு கேள்விக்குறியே.

இதன் காரணமாக இன்று மாணவர்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கின்றார்கள். மாணவர்கள் மாத்திரமன்றி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றார் கள்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகுவதற்கான நிலை இருக் கின்றது.

இந்த விடயத்தை நாங்கள் இன்று (நேற்று) நுவரெலியாவில் போராட்டம் செய்தமை போல நாடு முழுவதும் செய்வதற்கும் தீர்மானித்திருக்கின்றோம்.

இதற்கு உரிய பதிலை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொரோனாக் குணமடைவு 15 ஆயிரம் நெருங்குகிறது

கொழும்பு, நவ.25

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 465 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 962 ஆக அதிகரித் துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 508 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 456 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 601 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இது வரை 90 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 188 இலங்கையர்கள் நாடு வந்தடைந்தனர்!

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரண மாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த 188 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார் மற்றும் தோஹா ஆகிய நாடுகளில் இருந்த இலங்கையர்களே இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 12.45 மணியளவில், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து 50 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்த டைந்தனர்.

அதேபோன்று, நேற்று அதிகாலை 1.45 மணியளவில், கட்டாரிலிருந்து 48 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும், நேற்று அதிகாலை 5.25 மணியளவில் தோஹாவிலிருந்து 90 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு வருகைதந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொரோனா தொற்று அபாயம் நாட்டில் குறையவேயில்லை!

## சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் கூறுகிறார்



நாட்டில் கொரோனா தொற்று சமூக மான நிலையை அடைந்துள்ளது என உறுதியாகக் கூற முடியாது என சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித் துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப் படும் நடவடிக்கைகள் மற்றும் மக்களின் ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகவும் உறுதியாகக் கூற முடி யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் நாளொன்றுக்கு அடையாளம் காணப்படும் நோயாளிகளில் பெரும் எவ்வானோர் மேல் மாகாணத்திலும் குறிப் பாக கொழும்பு மாவட்டத்திலுமே அடை யாளம் காணப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஏனைய பிரதேசங்களில் குறைந்தளவான நோயாளிகளே அடை யாளம் காணப்படுகின்றபோதும் எதிர் வரும் நாள்களில் அதிகளவான பரிசோ தனைகளை முன்னெடுப்பதே தமது இலக்கு என்றும் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் குறிப்பிட்டார்.

# மத்தியகிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையரை அழைத்துவர முன்னுரிமை - சவேந்திரசில்வா



கொரோனா தொற்று காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருகின்றமை தொடர்பாக அதிக கவ னம் செலுத்தப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள் ளார்.

தொழில் நிமித்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளவர்கள் தற்போது பாரிய நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் அவர்களை மீள அழைத்துவர நடவடிக்கை எடுக்கப் பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க் கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் –

இந்த விடயம் தொடர்பாக வெளிவிவ கார அமைச்சு மத்திய கிழக்கு நாடுக ளில் உள்ள இலங்கைத் தூதரகங்க ளுடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் சவேந் திர சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மத்திய கிழக்கு நாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள இலங்கை யர்களை அழைத்து வருவதற்காக எதிர்வரும் வாரம் முதல் நாள்தோறும் விசேட விமானசேவைகள் முன்னெடுக்கப் படவுள்ளன எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய நாடுகளில் சிக்கி யுள்ளவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளதாகவும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மேலும் குறிப் பிட்டுள்ளார்.

# கனேடிய உயர் விருது இலங்கைத் தமிழருக்கு!



கனடிய பாதுகாப்புப் படையில் 22 ஆண்டுகள் நற்பணி ஆற்றிய மைக்காக, கனேடிய பாதுகாப்புப் படைத் தலை மையக முதுநிலை நிதியியல் நிர்வாகியும் இலங்கைத் தமிழரான மதியாபரணம் வாகீசன் கனடிய உயர் விருதை பெற்றுள்ளார்.

கனடாவின் உயர் மதிப்புறு விருதான Canadian Forces' Decoration (CD) First Clasp என்ற விருதை அவருக்கு வழங்கி, பாராட்டி கௌரவித் துள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான மதியா பரணம் வாகீசனுக்கு (1988 ஆம் ஆண்டு உயர்தரம்) கல்லூரி நிர்வாகம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

குறித்த உயர்மதிப்பைப் பெற் றுக் கொண்ட முதல் இலங் கைத் தமிழ் கனேடியர் இவர் என்பது குறிப் பிடத்தக்கது.

# பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய 48 கோடி ரூபா!

## கல்வி அமைச்சின் செயலாளர் தகவல்

பாடசாலைகளில் விசேட வசதிகளை அமைப்பதற்கும் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பாடசாலைகளுக்குப் போதுமான நிதி வழங்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், நாடு முழுவதும் உள்ள 10 ஆயிரத்து 165 பாடசாலைகளுக்கு 48 கோடி ரூபா வழங் கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

ஓகஸ்ட் மாதத்திலிருந்து சில பாடசாலை களுக்கு தலா ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா வரை வழங்கப்பட்டதாகவும் கல்வி அமைச் சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஒரு சில பாடசாலைகள் சுகாதார அதிகாரி ஒப்புதல் அளிக்கும் வரை மீண்டும் திறக்க அனுமதிக்கப்படாதுஎன்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது முடக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் பாடசாலைகளை மீண்டும் திறக்கும்போது கடுமையான நெறிமுறைகள் பின்பற்றப் படும் என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# அடக்கம்செய்ய அழுத்தம் கொடுத்தேன் என நிரூபித்தால் பதவி விலகத் தயார்!

## நீதி அமைச்சர் அலி சப்ரி

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த எமது உறவினரை அடக்கம் செய்வதற்கு அழுத்தம் கொடுத்தேன் என எவரும் நிரூபிப்பார்களானால் பதவியை இராஜினாமாச் செய்யத் தயாரென நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதாரண, இரத்மலானையில் கொரோனாவில் உயிரிழந்த தனது உறவினரைப் புதைக்க அமைச்சர் தலையீடு செய்தார் எனவும் முதலில் பொசிடிவ் ஆன பெண்ணுக்கு இரண்டாவது தடவை பி.சி.ஆர் பரிசோதனை நடத்தி நெகடிவ் ஆக மாற்றி அவரை புதைக்க நடவடிக்கை எடுத்தார் எனவும் அண்மையில் குற்றம் சுமத்தி இருந்தார்.

இந்நிலையில் அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் அலிசப்ரி மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா தொற்றால் இறக்கும் ஏனையவர்கள் தகனம்செய்யப்படுகையில்நான்இறந்தால் என்னை மாத்திரம் புதைப்பதற்கு நான் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கமாட்டேன்.

நான் அவ்வாறு ஒருபோதும் கீழ்த்தரமான அரசியல் செய்வதற்கு வரவில்லை. அவ்வாறு செய்திருந்தால் பதவி விலகுவேன். அந்தவகையில் குற்றஞ்சாட்டியவர் பதவி விலகத் தயாராக இருக்கின்றாரா?

மேலும், புதைப்பது தொடர்பில் உலக நாடுகளில் காணப்படும் முன்னுதாரணப்படி இங்கும் மேற்கொள்ள முயற்சி செய்கிறோம். அதற்காக சட்டத்துக்கு மாற்றமாக எதுவும் செய்ய முயலவில்லை.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வழக்கைத் துரிதப்படுத்துங்கள் அல்லது தூக்கில் இடுங்கள்!

## தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்குக் கடிதம்

வழக்கைத்துரிதப்படுத்துங்கள் அல்லது என்னைத் தூக்கிலிடுங்கள் என தமிழ் அரசியல் கைதியான கனகசபை தேவதாசன் (வயது – 63) ஜனாதிபதியிடம் பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் –

கனகசபை தேவதாசன் (வயது –63) ஆகிய நான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக சிறை வைக்கப்பட்டிருக்கிறேன்.

கொழும்பு மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபரால் எனக்கெதிராகத் தொடுக்கப்பட்ட 110 619௲12 மற்றும் 110 5638/11 ஆகிய இரு வழக்குகளிலும் முறையே 20 ஆண்டுச் சிறை மற்றும் ஆயுள் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டன.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து நான் மேன்முறையீடு செய்துள்ளமையுடன், இந்த வழக்குகளை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர விரும்பி, இரண்டிலும் எனக்காக நானே வாதாடுகிறேன்.

ஆனாலும், மேற்படி 04 283/17 மற்றும் 04 413/18 ஆகிய இரண்டு மேன்முறையீட்டு வழக்குகளும் நீதி நடைமுறையின் வீண் தாமதம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக முற்றாக முடங்கிவிட்டன.

இதன்மூலம், நிரபராதி என நிரூபிக்கும் வாய்ப்பு எனக்கு முற்றாக மறுக்கப்படுகிறமையுடன் எனது அடிப்படை உரிமை அப்பட்டமாக மீறப்படுகிறது.

இதனை விளக்கித் தங்களுக்கு சிறையூடாக ஆறு மாதங்களின் முன்பு கடிதம் அனுப்பினேன். துரதிர்ஷ்டவசமாக, அதற்குப் பதில் இன்னமும் வந்து சேரவில்லை. எனவே, இந்த விடயத்தை இன்று வேறுவழியின்றிப் பகிரங்கப்படுத்துகிறேன்.

மேதகு ஜனாதிபதி அவர்களே, எனது இந்த இரண்டு மேன்முறையீட்டு வழக்குகளையும் துரித விசாரணைக்குட்படுத்த உத்தரவிட்டு உதவுமாறும் அல்லது இந்த இரு வழக்குகளிலும் நான் பிணை பெற ஆவன செய்துதவுமாறும் கோருகிறேன்.

மேற்சொன்ன கோரிக்கையை நிறைவு செய்யும் இயலுமை தங்களுக்கில்லை எனத் தாங்கள் கருதும் பட்சத்தில், அரசியல் யாப்பில் தங்களுக்குத் தரப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, எனது தண்டனையை மரண தண்டனையாகத் தரமுயர்த்தி, 'யுத்தக் குற்றவாளி' என என்னைப் பிரகடனப்படுத்தி உடனடியாகவே பகிரங்கமாக என்னைத் தூக்கிலிட உத்தரவிடுங்கள்.– என கனகசபை தேவதாசன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தனது இந்த முடிவு தொடர்பாக யாரும் தன்னை ஆற்றுப்படுத்த முனைய வேண்டாம் எனவும் தனக்கு நீதி வேண்டும் அல்லது மரணம் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# முஸ்லிம் உடல்களை புதைக்க அனுமதி அளிக்கப்பட வேண்டும்!

## என்கிறார் மனுஷ நாணயக்கார



கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லீம்களின் உடல்களை புதைப்பதற்கு அனுமதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார கேட்டுக்கொண்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர், மதம், இனம், அரசியல் என்பதைக் காரணம் காட்டி இதனைப் பிரிக்காது பொதுவாக இந்த விடயத்தை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு 200 இற்கும் மேற்பட்ட நாடுகள் அதற்கு அனுமதி வழங்கியுள்ளன என்பதை சுட்டிக்காட்டிய மனு நாணயக்கார, உலக சுகாதார ஸ்தாபனம் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கொரோனா தடுப்பூசிக்கு மாத்திரம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி வேண்டுமெனக்கூறும் அரசாங்கம், உடல்களைப் புதைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதியைப் பொருட்படுத்தவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார கேள்வியெழுப்பினார்.

# 1,000 ரூபா சம்பள உயர்வு வழங்க மறுக்கும் தோட்டக் கம்பெனிகளின் ஒப்பந்தம் இரத்து!

## எச்சரிக்கின்றது அரசு

தோட்டத்தொழிலாளர்களுக்கு அதிகபட்சம் 1,000 ரூபா ஊதியத்தை வழங்க மறுக்கும் தோட்ட நிறுவனங்களுடனான ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும் அல்லது நிறுத்தப்படும் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

2021ஜனவரி முதல் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியம் 1,000 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2021 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிந்தார்.

இருப்பினும் தங்களுக்கு ஏற்பட்ட பெரும் இழப்புகளுக்கு அரசாங்கத்தால் மானியம் வழங்கப்படாவிட்டால் 1,000 ரூபாவை செலுத்த ஒப்புக்கொள்ள மாட்டோம் என தோட்ட நிறுவனங்கள் கூறியிருந்தன.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் –

1,000 ரூபாவைச் செலுத்த மறுக்கும் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை அரசாங்கம் மீளாய்வு செய்யும் எனத் தெரிவித்துள்ளார்.

இரு தரப்புக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் 32 பிராந்திய தோட்ட நிறுவனங்களுக்கு நிலத்தை அரசாங்கம் குத்தகைக்கு வழங்கியுள்ளது.

இருப்பினும், சில தோட்ட நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன எனக் கூறி தங்கள் தொழிலாளர்களுக்கு ஈ.பி.எவ். மற்றும் ஈ.டி.எவ். நிதிகளை செலுத்துவதில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன எனக் கூறி 1,000 ரூபாவைச் செலுத்த மறுத்தால், அந்தந்த நிறுவனங்களுடனான அசல் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவோ அல்லது நிறுத்தவோ அரசாங்கத்துக்கு உரிமை உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு மஸ்கெலியாவில் கொரோனாத் தொற்று!

மஸ்கெலியா காட்மோர் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பகுதிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் காட்மோர் புரக்மோர் தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, மகள் மற்றும் மகன் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் தனிமைப்படுத்தலில் இருந்த நால்வருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி தற்போது அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் தந்தை மற்றும் மகன் கொரோனா தொற்று சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில் தாய் மற்றும் மகள் ஆகியோர் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அந்த வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்படி நால்வரும் அண்மையில் அந்தப் பகுதியில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவரின் உறவினர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை மஸ்கெலியாவின் பிரவுன்ஸ்விக் மற்றும் பனியன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.சுழிபுரத்தில் குண்டுகள் மீட்பு!

யாழ்ப்பாணம் சுழிபுரம் சவுக்கடி மீன்பிடி துறைமுகத்துக்கு செல்லும் பாதைக்கு அருகில் இருந்து இரு குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

விவசாய நடவடிக்கைக்காக காணியைத் துப்புரவு செய்யும்போது, குண்டுகள் வெளிப்பட்டமையை அடுத்து அது தொடர்பில் மக்களால் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

கடற்படையினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து அந்த இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் இரு குண்டுகளையும் மீட்டுள்ளனர்.

குறித்த காணி உள்ளிட்ட பகுதியில் கடந்த காலங்களில் கடற்படையினரின் முகாம் அமைந்திருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மக்களிடம் அப்பகுதி கையளிக்கப்பட்டது.

அதனை அடுத்து அப்பகுதியினர் விவசாய நடவடிக்கை மற்றும் கால் நடைகளின் மேய்ச்சல் நிலமாக அப்பகுதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே அப்பகுதியில் இருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் எஸ். அன்ரனி நோர்பேட்





# வட இலங்கைக்கு வட கிழக்கில் வங்கக் கடல் 'நிவர்' சூறாவளி!

இலங்கையின் காலநிலையில் தென் மேல் 'மொன்சூன்'கால மழைவீழ்ச்சி மே மாதம் தொடக்கம் செப்ரம்பர் மாதம் வரையில் இடம்பெறுகின்றது. ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் இடைக்கால மொன்சூன் பருவமாகக் காணப்படும். டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரை இலங்கையில் வட கீழ் மொன்சூன் பருவகாலமாகக் கருதப்படும். இலங்கையின் மழை வீழ்ச்சி நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளின் படி இப்பருவ காலங்கள் வரையறுக்கப்பட்டு இருந்தாலும் கடந்த சில தசாப்தங்களாக ஏற்பட்டு வரும் பூகோள ரீதியான காலநிலை மாற்றங்களினாலும் 'எல்நினோ' வின் பாதிப்பினாலும் இப்பருவ காலங்களில் முன்னுக்கும் பின்னுக்குமான நகர்வுகளை அவதானிக்க முடிகின்றது.

ஒரு பிரதேசத்தின் வானிலை மற்றும் காலநிலையை நிர்ணயிப்பதில் வளிமண்டல அமுக்கம், படிவுவீழ்ச்சி, காற்று, ஞாயிற்றுக் கதிர்வீசல், முகில் ஆகிய வானிலை மூலகங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. ஞாயிற்றுக் கதிர் வீசலின் தாக்கத்தினால் புவியின் மத்திய பகுதியில் ஏற்படும் தாழமுக்கம் காரணமாக வியாபாரக் காற்றுக்கள் அல்லது மொன்சூன் காற்றுக்கள் இப்பகுதியில் ஒருங்குவதை அல்லது ஒன்று சேர்வதைக் காணலாம். இவ்வாறு மொன்சூன் காற்றுக்கள் ஒன்று கலக்கும் பகுதி ஆயிரம் மைல் அகலமான ஒரு வலயமாகக் காணப்படும்.


மத்திய கோட்டுக்கு வடக்காக 25 பாகை வட அகலக் கோடு வரை நகரும் இவ் வலயம் வட ஒருங்கல் வலயம் எனவும், தெற்காக 15 பாகை தென் அகலக் கோடு வரையும் நகரும் வலயம் தென் ஒருங்கல் வலயம் எனவும் அழைக்கப்படும். எனவே இவ் வலயம் ஏறக் குறைய 40 பாகை வரை அகலக்கோட்டு நகர்வினைக் கொண்டுள்ளது. இவ்வலயத்தின் வடக்கு, தெற்கு நோக்கிய பெயர்வின் போது இலங்கை எக்காலத்திலும் அதனுள் இருப்பதனால் அதன் தாக்கத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாது. தீவின் மேலாக இவ்வலயம் செல்லும் போது கடும் காற்றுக்களும் அதிகளவான மழை வீழ்ச்சியும் கிடைக்கும். வானம் இருண்டதாகக் காணப்படும். இதனால் தீவின் காலநிலையில் இவ்வலயம் செல்வாக்குச் செலுத்துவதாக இருக்கின்றது. ஞாயிற்றின் இடப்பெயர்விற்கு ஏற்ப மத்திய கோட்டில் வடக்காகவும், தெற்காகவும் இவ்வலயம் நகர்வதனால் நிலையற்றதாக உள்ளது. இந்து சமுத்திரத்திலும் மேற்கு பசுபிக்கின் பெரும்பகுதியிலும், மத்திய கோட்டு ஆபிரிக்காவின் கிழக்குக் கரை வரையும் பரந்து காணப்படும் இவ்வலயம் பத்தாயிரம் மைல்கள் நீளமானதாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இடை அயன ஒருங்கல் வலயத்தின் வடக்குப் பக்கமான பெயர்வின் போது மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. மார்ச், ஏப்ரலின் பின்னர் இவ்வலயம் வடக்கு நோக்கி நகரும் போது மே மாதக் கடைசியில் தென்மேல் மொன்சூன் காற்று பரந்த சமுத்திரத்தைக் கடந்து வந்து இலங்கையின் தென்மேற்குக் கரையோரத்தை அடைகின்றது. இக்காலத்தில் காலை வேளைகளில் கரையோரப் பகுதியில் மழைத்தூறல்கள் விழுவதைக் காணலாம். இவ்




ஒருங்கல் வலயத்தின் செல்வாக்கினால் உள்ளூர் வெப்பநிலையில் மாற்றங்கள் ஏற்படும். இடி மின்னல்களும் மழையும் மார்ச், ஏப்ரல் பருவத்தில் காணப்படும். இக்காலத்தில் இலங்கையின் தென்மேல் பகுதி 300 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழையைப் பெறுகின்றது. இலங்கையின் காலநிலையில் இவ் ஒருங்கல் வலயத்தின் தாக்கம் பற்றி 'சிறிநந்தா' மற்றும் 'ஜெயமகா' போன்றோர் தமது ஆய்வுளில் எடுத்துக் காட்டியுள்ளனர். இலங்கைக்கு மேலாக செறிவான முகிற் கூட்டங்களுடன் இணைந்த இவ்வலயம் சராசரியாக 75 - 150 கிலோ மீற்றர் அகலம் கொண்டதாக இருக்கின்றது. இலங்கையின் எதிர்காலக் காலநிலையை எதிர்வு கூறுவதற்கு இவ்வாறான அமைவிடம் மற்றும் நகர்வுகள் பற்றிய தரவுகள் மிக முக்கியமானவை.

மே தொடக்கம் செப்ரெம்பர் வரையான காலத்தில் இடை அயன ஒருங்கல் வலயத்தின் தாழமுக்கப் பகுதி வடக்கு நோக்கி நகரும்போது அத் தாழமுக்கத்தை நோக்கி தென்மேல் மொன்சூன் காற்று இழுக்கப்பட்டு இலங்கைக்கு மேலாக வடக்கு நோக்கிச் செல்கின்றது. இக் காற்று இரு கிளைகளாகப் பிரிந்து ஒன்று அராபியன் கடற் கிளையாக கொன்கான், மலபார் கரைகளை அடைகின்றது. மற்றையது வங்காளவிரிகுடாக் கிளையாகச் சென்று அரக்கன்யோமா மலைகளால் தடுக்கப்பட்டு கங்கைச் சமவெளி ஊடாக நகர்கின்றது. இத்தகைய நகர்வுகளினால் தென்மேல் மொன்சூனின் அதிகளவான மழைவீழ்ச்சி இந்தியாவின் மேற்கு மலைப் பகுதிக்கும், அசாம், மற்றும் இமயமலை யின் தாழ் பகுதிச் சாய்வுகளிலும் கிடைக்கின்றது. செப்ரெம்பரின் மத்திய பகுதியில் மழை குறைந்து செல்லும் நிலையை அடைகின்றது. ஒக்டோபரில் வானம் தெளிவாகவும் வெப்பநிலையில் சிறிது அதிகரிப்பும் இந்திய தீபகற்பப் பகுதியில் ஏற்படும். செப்ரெம்பரின் நடுப் பகுதியிலிருந்து டிசம்பர் வரை மொன்சூன் பின்வாங்கும் காலமாகும்.



சமுத்திரத்தின் மேலாகக் காணப்படும் வளிமண்டல அமுக்க மாற்றத்தின் காரணமாக இப் பின்வாங்கல் ஏற்படுகின்றது. வளிமண்டலச் சுற்றோட்டத்தில் இதன் பின்னர் ஏற்படும் பின்னடைவு காரணமாக ஒருங்கல் வலயம் உப கண்டத்திலிருந்து விலகி மத்திய கோட்டுப் பக்கமாக நகர்கின்றது. இதன் பின்னர் வட கீழ் மொன்சூன் காற்று ஆரம்பிக்கின்றது. தென்மேல் மொன்சூனில் ஏற்படும் சிறிய பின்னடைவுகள் மிகக் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. மொன்சூன் காற்றுக்கள் சில இடங்களில் பிந்துவதாலும் அல்லது குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் பின்வாங்குவதாலும் பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கோடைகாலப் பயிர்கள் மாத்திரமன்றி மாரி காலப் பயிர்களும் இதனால் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. மழைவீழ்ச்சி தவறுமாக இருந்தால் பயிரழிவுகள் ஏற்படும். இதனால் பஞ்சமும் வறுமையும் கடந்த காலத்தில் ஏற்பட்டிருப்பதனைக் காணலாம். இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் கூட இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் தான் 'டட்லி ஸ்ராம்' என்பவர் 'பஞ்சம் அல்லது வறுமை ஏற்படும் பகுதிகள் உண்மையில் வரட்சியான பகுதிகள் அல்ல. அவை இடைத்தர மழைவீழ்ச்சியைக் கொண்ட பகுதிகளே' எனக் குறிப்பிட்டார்.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் அயனச் சூறாவளிகள் வங்காள விரிகுடாவில் விருத்தியடைகின்றன. அவை மேற்கு மற்றும் வடமேற்குப் பக்கமாக நகர்வதைக் காணலாம். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளையும், இந்தியாவின் கிழக்குக் கரைப் பகுதிகளையும் அவை தாக்கும் பொழுது கடும் மழைவீழ்ச்சியைக் கொடுப்பதுடன் பெரும் அழிவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றது. இப்பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது அயனச் சூறாவளியின் தாக்கங்கள் இக்காலத்திற்குரிய முனைப்பான அம்சங்களாகக் காணப்படுகின்றன. கடந்த நான்கு தசாப்தங்களுள் 1964, 1978, 1992 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் நான்கு பாரிய சூறாவளிகள் இலங்கையைக் கடந்து சென்றன. (இலங்கை நில அளவைத் திணைக்களம், 2016). 1978 இல் மட்டக்களப்பினைத் தாக்கிய சூறாவளி மிகவும் மோசமானதாக இருந்தது. மணிக்கு 200 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட வேகத்தில் தாக்கியிருந்தது.

இரண்டாவது இடை மொன்சூன் பருவமாகிய இக் காலத்தில் வங்காள விரிகுடாவில் தாழ் அமுக்கங்களும், சூறாவளிகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் சில காலங்களில் கடும் காற்றுடன் கூடிய பரவலான மழைவீழ்ச்சி நாடு முழுவதும் கிடைக்கப்பெறுவதுடன் சில காலங்களில் வெள்ளப்பெருக்குகள் மற்றும் நிலச் சரிவுகளையும் ஏற்படுத்துகின்றன. மாலை வேளைகளில் இடிமின்னல், புயல் காற்று மழையையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் 2020 நவம்பர் 21 ஆம் திகதியன்று தென் ஆசியச் சூழலில் அராபியன் கடலிலும், வங்காள விரிகுடாவிலும் இரண்டு தாழமுக்க மையங்கள் உருவாகியுள்ளதாக 'தென்னிந்தியாவின் தேசிய வானிலை எதிர்வு கூறல் மையம்' குறிப்பிட்டிருந்தது. முகில்களின் அம்சங்களையும் அவற்றின் வழித்தடங்களையும் துல்லியமாகப் பெற்று காலரீதியான வளிமண்டல அசைவினை மதிப்பிடும் 'இன்சாட்' - 3 செய்மதி மூலமான படிமங்களை ஆதாரமாகக் கொண்டு இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் அநீதிகளை - கொடுஞ்செயல்களை நாம் பார்த்துக்கொண்டு இருக்கவேமுடியாது



## எதிர்க்கட்சி பலமிக்கதாக இருக்க வேண்டும் எனவும் சஜித்துடனான சந்திப்பின் பின் சந்திரிகா தெரிவிப்பு

அரசின் முறைகேடுகளை - அநீதிகளை - கொடுஞ் செயல்களை - அக்கிரமங்களை எம்மால் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்க முடியாது. விரைவில் இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டும்; தீர்வு வேண்டும். அதேவேளை, எதிர்க்கட்சியும் பலமாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகவே இந்த அரசு செயற்படுகின்றது. கொரோனாவின் மூன்றாவது அலை நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற் படுத்த இந்த அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே பிரதான காரணமாகும் என்றும் அவர் குற்றஞ்சாட்டி னார்.

நாட்டினதும் மக்களினதும் எதிர்கால நட வடிக்கைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் விரிவாகக் கலந்துரையா டியுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் நேற்று திடீர் சந்திப்பு நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடும்போதே சந்திரிகா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் ததாவது:-

அண்மைக்கால அரசியல், சமூக மற் றும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப் பட்டது.

கொரோனா வைரஸ் பரவலின் அச்சுறுத்தல் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

அதேபோன்று, இலங்கைக்குப் பொருத்தமான தேசிய சுற்றாடல் கொள்கை யொன்று வகுக்கப்பட வேண்டிய தன் தேவை குறித்தும் பேசப்பட்டது.

உலகம் எதிர்கொண்டுள்ள பருவகால மாற்றம் குறித் தும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன - என் றார்.

## ரிஷாத்தைக் கொலைசெய்ய திரைமறைவில் சதித்திட்டம்!

### உடன் விசாரணைக்கு சஜித் அணி வலியுறுத்து



கொழும்பு,நவ.24

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினரு மான ரிஷாத் பதியுதீனைப் படுகொலை செய் யத் திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. அவை கருணா அம்மானிடம் வழங்கப்பட் டுள்ளன.

நாமல் குமார வினால் முன்வைக்கப்பட் டுள்ள கருத்துக்கள் தொடர்பில் உடனடி யாக அரசு விசாரணைகளை முன்னெ டுக்க வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற் றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சஹ்ரானின் தாக்குதல் விடயத்தில் ஒரு புள்ளியாகப் பார்க்கப்பட்ட நாமல் குமார நேற்று ஒரு காணொலியை வெளி யிட் டுள்ளார். அதிலே பல சர்ச்சைக்குரிய விட யங்கள் தெரிவிக்கப்பட்டன. ரிஷாத் பதியு தீனைப் படுகொலை செய்ய 15 கோடி ரூபா ஒப்பந்தத்தில் திட்டமொன்றை கருணா அம் மானுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா அம்மான் அரசுடன் தொடர்பு பட்டவர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேண்டிய ஒரு நபர். ஆகவே, இந்த விடயம் தொடர்பில் உடன் விசாரணைகளை முன் னெடுக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முன்னர் நாமல் குமார இப்படித்தான் காணொலி, சி.டி. என்பனவற்றை வெளி யிட்டார். ஆகவே, இது தொடர்பில் உடனடி யாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

பிரான்ஸிலுள்ள துஸார பீரிஸ் என் கின்ற நபரும் இதனுடன் தொடர்புபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் இவ் வாறு தொடர்புபட்டிருந்தால் அவரை உடனடி யாக நாட்டுக்கு அழைத்து வந்து விசார ணைகளை முன்னெடுக்க வேண்டும். – என்றார்.

# நினைவேந்தல் உரிமையை தட்டிப் பறிக்கவே முடியாது!

## கோட்டா அரசின் அடாவடிக்கு எதிராக சந்திரிகா அம்மையார் போர்க்கொடி

கொழும்பு, நவம்பர் 24

இலங்கையில் போரில் இறந்த தங்கள் உறவுகளை நினைவுகூர மூவின மக்களுக்கும் உரிமையுண்டு. அதில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடுகள் இருக்கவேகூடாது. எனவே, நினைவேந்தல் உரிமையைஎவரும் தட்டிப் பறிக்க முடியாது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

நல்லாட்சியில் இருந்த நினைவேந்தல் உரிமை, கோட்டாபய அரசின் ஆட்சிக் காலத்தில் கிடைக்காது என்பது தமிழர்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயம்தான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தத் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் கருத்துரைக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரில் இறந்த உறவுகளை நினைவு கூர அனைத்து



இன மக்களுக்கும் சமவு ரிமை வழங்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் வழங்கப் பட வேண்டும். இதில் நான் உறுதியாக இருக்கின்றேன் - என்றார்.

# மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை கோரும் யாழ். பொலிஸின் மனு மீண்டும் ஒத்திவைப்பு

## புதனன்று வருகின்றது விசாரணைக்கு

மாவீரர் நாள் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக் கோரும் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரின் விண்ணப்பம் மீதான விசாரணை நாளை வரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உள்ளிட்ட இடங்களில் நினைவேந்தலை நடத்துதற்குத் தடை கேட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், கஜேந்திர குமார் பொன்னம்பலம், எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன், சட்டத்தரணி களான விஸ்வலிங்கம் மணிவண் ணன், க.சுகாஷ், யாழ். மாநகர சபை உறுப்பினர்களான வரதராஜா பார்த் தீபன், மயூரன் உள்ளிட்ட 37 பேருக்கு எதிராக தடைக் கட்டளை வழங்குமாறும் இந்த விண்ணப்பம் செய்யப்பட் டிருந்தது.

'விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைகூருவதற்காக நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. எனவே, மாவீர்ர் நாள் நிகழ்வுகளைத் தடுக்கும் வகையில் கட்டளை வழங்கவேண் டும் என்று பொலிஸார் விண்ணப்பத் தில் கேட்டிருந்தனர். அத்துடன் கொரோனாத் தனிமைப் படுத்தல் கட்டளைச் சட்டத்தையும் பொலிஸார் விண்ணப் பத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

பிரதிவாதிகளில் ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ.சுமந்திரன் ( நாடாளு மன்ற உறுப்பினர்), சட்டத்தரணிகளான விஸ்வலிங்கம் மணிவண்ணன், கனகரட்ணம் சுகாஷ் உள்ளிட்டோர் கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாகி பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு கடுமையான ஆட்சேபனையை முன் வைத்தனர்.

இந்த வழக்கு இன்று காலை மன்றில் விசாரணைக்கு வந்தபோது, வழக்குத் தொடுநர் சார்பில் மூத்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பிரபாகரன் குமாரரட்ணம் பிற்பகல் முன்னிலையாவார் என்று அரச சட்டவாதியால் அறிவிக்கப் பட்டதற்கு அமைய வழக்கு பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதும் கால நிலை சீரின்மை காரணமாக மூத்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நாளை காலை மன்றில் முன்னிலையாவார் என்று அரச சட்டவாதி ச.யாதவன் மன்றுக்கு அறிவித்தார். அதனால் குறித்த வழக்கு நாளை முற்பகல் 11 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

# சுதந்திர வீரர்களை நினைவு கூருவதை தடுக்க முடியுமா?

## வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி!

கொழும்பு, நவ. 25

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப்பதற்காக, தமது சொந்த வாழ்வை ஈகம் செய்த சுதந்திர வீரர்களை நினைவு கொள்வதை தடுக்க முடியுமா? என வடக்கு, கிழக்கு வலித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எங்கள் பிள்ளைகளை நாங்கள் நினைவிற்கொள்வதை எவரும் தடுக்கமுடியாது எனவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் வடக்கு,கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் சோலைவனம் தனியார் விடுதியில் இடம்பெற்றது

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

எங்கள் வாழ்விற்காக வீர காவியமான எங்கள் பிள்ளைகளை நவம்பர் 27 இல் நினைவிற்கொள்வதை இன அழிப்பு மூலம் லட்சக்கணக்கான தமிழ் உயிர்களை காவுகொண்ட கோட்டா அரசாலும், அதன் கூலிப்படையாலும் தடுத்துவிட முடியாது.

சிங்கள இனவாத அரசு மேற்கொண்ட போரில் போராடி மடிந்த மாவீரர்களை நினைவிற்கொள்ளவிடாமல் தடுக்கும் நடவடிக்கையை நீதிமன்றம் ஊடாக மேற்கொண்டு வருகின்றது.

2009 இற்கு முற்பட்ட ஆண்டுகளில், நவம்பர் 27 ஆம் திகதி செய்தியை, உலகமே எதிர்பார்த்திருந்தது. ஏன் தென்னிலங்கையும் ஏதோவொரு செய்திக்காகக் காத்திருந்தது.

அந்த செய்தியை அடிப்படையாக வைத்தே, அடுத்தகட்ட நகர்வுகளுக்கான காய்கள் நகர்த்தப்பட்டன. அதுதான் கடந்தகால உண்மை வரலாறு.



போரில் உயிர் இழந்தவர்களை நினைவு கொள்வதை தடுக்க எந்த நாட்டிலும் உரிமை இல்லாத நிலையில் தமிழர்களை அடக்கி, ஒடுக்க முனையும் சிங்கள பேரினவாத அரசுக்கும், அதன் ஏவல் படைகளுக்கும் தமிழர்களாகிய நாங்கள், ஒன்றைச் சொல்லிவைக்க விருப்புகின்றோம்.

எங்கள் பிள்ளைகளை நாங்கள் நினைவிற்கொள்ளாமல் வேறு யார் நினைவிற் கொள்வது? ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை மீறும் இலங்கை அரசின் தமிழர்கள் மீதான அடக்குமுறையை உலகறியச் செய்வோம்.

சிங்கள இனத்தவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு இன்னொரு சட்டம் என்ற நிலையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

மே 19ஆம் திகதி உயிரிழந்த படையிருக்கான தேசிய நினைவுகூருதல் பெருமெடுப்பில் கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் மரணித்த இந்திய இராணுவத்தினரும் நினைவு கூரப்படுகின்றனர். ஆகவே, கார்த்திகை வீரர்களும் (மாவீரர்கள்) நினைவு கூரப்பட வேண்டியவர்களே!

எங்கள் பிள்ளைகளை நாங்கள் ஆண்டுக்கு ஒரு தடவை நினைவிற்கொள்ளும் நவம்பர் 27 இல் எந்த தடையையும் எவரும் விதிக்கமுடியாது என்பதை, எங்கள் உறவுகள் நினைவாக நாங்கள் ஏற்றும் ஒவ்வொரு தீப சுடர்களும் சொல்லி நிற்கும்.

எனவே, நினைவேந்தலை அரசியலாக்கி, அதனூடாக குளிர்காய்வதற்கு இடமளிக்காது வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற அனைத்து தமிழ் உறவுகள் அனைவரும், எங்கள் தேசத்துக்காக உயிர் கொடுத்த உங்கள் பிள்ளைகளை, சகோதர சகோதரிகளை நவம்பர் 27 இல் நினைவு கூருவது ஒவ்வொரு தமிழர்களின் தார்மீக கடமையாகும்.

நாட்டில் உள்ள கொரோனா வைரஸ் தொற்றைக் கருத்திற்கொண்டு, பொது சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி, துயிலும் இல்லங்களில் மீளாத்துயிலில் இருக்கும் தத்தமது உறவுகளுக்கு விளக்கேற்றி, வணக்கம் செலுத்த முன்வரவேண்டும் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் சார்பாக வேண்டி நிற்கின்றோம். – என அவர் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழகத்துக்குத் தகுதிபெற்ற மாணவர்களுக்கான இணையப் பதிவு!

2019/2020 ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ள மாணவர்கள் இணையத்தளத்தின் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளது.

மாணவர்கள் இணையத் தளத்தின் ஊடாக பதிவுகளை செய்வதற்கான நடவடிக்கைகள் நடைமுறையில் இருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை 41 ஆயிரத்து 500 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகியுள்ளனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விவரங்களை www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தில் அல்லது www.selection.ugc.ac.lk என்ற இணைத்தளத்திலோ பார்வையிட முடியும்.

## ஹெரோயின் போதை வைத்திருந்த பெண் உட்பட இரண்டுபேர் கைது!

நீர்கொழும்பு - கொச்சிக்கடை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஒலிப்பதிவொன்றை வெளியிடடுள்ள அவர் மேலும் கூறியவை வருமாறு -

நீர்கொழும்பு - கொச்சிக்கடை பகுதியில் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது காரில் சென்றுகொண்டிருந்த சந்தேக நபர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார், காரை சோதனைக்குட்படுத்திய போது அதிலிருந்து 152 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.



பங்கதெனிய மற்றும் வெரலவத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணும், 34 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகத் தனிமைப் படுத்தல் சட்டவிதிகள் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்ற நிலையில், ஒருசிலர் இந்த சந்தர்பத்தை சட்டவிரோத செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். இது போன்ற செயற்பாடுகள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்திக் கொண்டு தான் இருக்கின்றோம்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள இந்த சந்தேக நபர்கள் பயன்படுத்திய காரையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்நிலையில் சந்தேக நபர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தி, அவர்களை ஏழுநாள்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்குட் படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. - என்றார்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டன!

## முற்பதிவுகளுக்கு தொலைபேசி இலக்கங்கள்

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள மோட்டார்வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட ஊழியர்களுடன் நேற்று மீள ஆரம்பமாகின.

கொவிட் - 19 கொரோனா வைரஸ் பரவல் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பிரதான காரியாலயம் அமைந்துள்ள பிரதேசம் இதுவரை காலமும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும் தற்போது அந்த தனிமைப் படுத்தல் உத்தரவை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானத்திருக்கிறது. எனவே கடந்த சில நாள்களில் பொதுமக்கள் எதிர்நோக்கியிருந்த சிக்கல்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நேற்று (செவ்வாய்கிழமை) நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள மோட்டார் போக்குவரத்து காரியாலயத்தின் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்ட ஊழியர்களுடன் ஆரம்பமாகியுள்ளது.

நாரஹென்பிட்டி பிரதான காரியாலய செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும், அதனூடாக சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு முன்கூட்டியே திகதியும் நேரமும் ஒதுக்கப்பட வேண்டும். அதன்படி நேற்றைய தினத்திலிருந்து (திங்கட் கிழமை) இனிவரும் காலங்களில் காலை 9 மணி முதல் மாலை 4 வரையான காலப் பகுதியில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு, சேவையைப் பெறுவதற்கான முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை யாழ்ப்பாணம், அநுராதபுரம், குருணாகலை, கம்பஹா மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலுள்ள காரியாலயங்கள் தொடர்ந்தும் பொதுமக்களுக்கான சேவை வழங்கலில் ஈடுபட்டுவரும் நிலையில், பொதுமக்கள் தமக்கு அண்மையிலுள்ள காரியாலயங்களில் தமக்கான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்நிலையில் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வருபவர்கள் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் சுகாதாரப்பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள சுகாதாரப்பாதுகாப்பு அறிவுறுத்தல்களை உரியவாறு பின்பற்ற வேண்டும் என்று மோட்டார்வாகன போக்குவரத்துத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை இன்று முதல் மேற்படி திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசிய இலக்கங்களின் ஊடாகத் தொடர்புகொண்டு முன்னனுமதியைப் பெற்றுக்கொள்வது அவசிமாகும்.

கார், வான், லொறி ஆகியவற்றைப் பதிவுசெய்தல் - 0706354107 அல்லது 0706354108, பஸ் வாகனப்பதிவு - 0706354109, மோட்டார் சைக்கிள்களைப் பதிவுசெய்தல் - 0706354110 அல்லது 0706354111, ஓட்டோக்களைப் பதிவு செய்தல் - 0706354112, கார் ஒதுக்கீடு - 0706354114 அல்லது 0706354115, ஓட்டோ ஒதுக்கீடு - 0706354116 அல்லது 0706354117, லொறி ஒதுக்கீடு - 0706354117, மோட்டார் சைக்கிள் ஒதுக்கீடு - 0706354137 அல்லது 0706354137, பஸ் வாகன ஒதுக்கீடு - 0706354139 அல்லது 0706354139, வாகன இலக்கத்தகடு - 0706354141, நிர்வாகம் - 0706354142, சந்தேகங்கள் - 0706354144, முறைப்பாடுகள் மற்றும் யோசனைகள் - 0706354150, ஏனையவை - 0706354147 அல்லது 0706354148 அல்லது 0706354149.

# முடக்கப்பட்ட பகுதி மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா போதுமானதல்ல!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தல்



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கொழும்பில் முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு போதுமானதல்ல. எனவே அவர்களுக்குத் தேவையான உணவுப்பொருள்களையும்வாழ்வாதாரத்துக்குத் தேவையான உரிய கொடுப்பனவையும் அரசாங்கம் வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில் -

தற்போது கொழும்பு நகரில் கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தி மற்றும் பொரளையை அண்மித்த பகுதிகள் மிகவும் கவலைக்கிடமான நிலையிலுள்ளன. கொவிட் அச்சுறுத்தலால் இப்பகுதிகளில் முடக்கப்பட்டுள்ள நிலையில் , இந்த பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரம் அற்றுப் போயுள்ளது.

இதனால் அவர்களுக்குத் தமக்குத் தேவையான உணவைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே இங்குள்ள மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றேன்.

தற்போது அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 5 ஆயிரம் ரூபா நிவாரண கொடுப்பனவு எதற்கும் போதாததாகும். இங்குள்ள மக்கள் தற்போது வீதியில் இரங்கி போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த போராட்டம் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள முடியாமல் முன்னெடுக்கும் போராட்டமேயன்றி அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படும் போராட்டம் அல்ல.

கொவிட்டுடன் போராட வேண்டிய தேவையில்லை. போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் அளவிற்கு அரசாங்கம் செயற்பட வேண்டிய அவசியமும் இல்லை. எனவே கொழும்பில் முடக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுமாறு வலியுறுத்துகின்றோம். அந்த மக்களின் வாழ்வாதாரததுக்குத் தேவையான கொடுப்பனவை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம். - என்றார்.

# ஊடகவியலாளருக்கு விரைவில் காப்பீடு!

ஊடகவியலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்த வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஜெகத் பி. விஜேவீர, நெறிமுறை ஊடகம் பற்றிக் கற்பதற்கான ஊடக கல்லூரியொன்று அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறினார்.

கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வெகுஜன ஊடகத்துறை அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த அமர்வில் அமைச்சர் மஹிந்த அமரவீர, கெஹலிய ரம்புக்வல, நாடாளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, குணதிலக ராஜபக்ஷ, சாகர காரியவசம் ஆகியோரும், அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இணையத் தளங்களை ஒழுங்குபடுத்துவதற்கான அவசியம் காணப்படுவதாகவும், இதற்காக எதிர்வரும் இரண்டு வாரங்களில் உரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் இதன்போது வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வல தெரிவித்தார்.

சமூக ஊடகங்களால் இனங்களுக்கிடையில் குழப்பத்தைத் தூண்டும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றமை அவசியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் இங்கு தெரிவித்தார். இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த சிங்கப்பூரில் புதிய சட்டமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், இதனை ஆராய்ந்து இங்கு புதிய வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

குடிமக்களின் சுயமரியாதையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் பத்திரிகைக் கவுன்சில் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும், வெகுஜன ஊடகங்களால் சகல மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வல, அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் குறிப்பிட்டார்.

தேவையற்ற விதத்திலான சேறுபூசும் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் எனவும், இதற்கு வெகுஜன ஊடகங்களுக்கான ஒழுங்குபடுத்தலொன்று அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பத்திரிகைக் கவுன்சில் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் வெகுஜன ஊடகத்துறை அமைச்சு தொடர்பான ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடுவதன் ஊடாக அதற்கான செயற்பாடுகளை இலகுபடுத்த முடியும் என இங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் கூறினார். தொலைக்காட்சி மற்றும் வானொலிகளை ஒழுங்குபடுத்துவதற்கு பொருத்தமான முறைமையொன்று கொண்டுவரப்பட வேண்டும் எனவும் பேராசிரியர் வலியுறுத்தினார்.

இது தொடர்பான திருத்தத்தை அமைச்சுசார் ஆலோசனைக் குழு சபையில் சமர்ப்பித்த பின்னர் அதனை சட்டவரைவுக் குழுவுக்கு அனுப்புவது இலகுவான செயற்பாடாக இருக்கும் என்றும், சட்டமூலத்தை தொழில்நுட்ப குழுவுக்கு ஆற்றுப்படுத்துவது மிகவும் முக்கியம் என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

வெகுஜன ஊடக நிறுவனங்களில் சுய தணிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் 2015ஆம் ஆண்டு கலந்துரையாடப்பட்டதாகவும், இதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயகார இங்கு தெரிவித்தார். ஊடகங்களால் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு மகத்தானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ரூபவாஹினி அலைவரிசையின் ஊடாக நாடாளுமன்ற அமர்வுகள் ஒளிபரப்பப்படுவதை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



ஊடகத்துறையுடன் தொடர்புபட்டவர்களை தொழில்சார் நிபுணர்களாக ஏற்றுக்கொள்வது, ஊடகவியலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயித்தல், பொதுமக்கள் தொடர்பாடல் தொடர்பான பட்டதாரிகளை துறைசார்ந்த தொழிலுக்கு அனுப்புதல், ஊடகக் கல்வி தொடர்பான பாடநெறியைக் கற்பிப்பதற்கு பாடசாலைகளில் ஆசிரியர்களை நியமித்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அரசாங்க தொலைக்காட்சிகளில் தரத்தை உருவாக்குவதன் அவசியம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டரா அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு கடந்த நான்கு வருடங்களில் 6 தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், 2014 ஆம் ஆண்டில் அந்தத் தொலைக்காட்சி அலைவரிசை கணக்கெடுப்புக்களில் முதலாவது இடத்தில் இருந்ததாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வல சுட்டிக்காட்டினார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அரசாங்க ஊடகங்கள் நஷ்டம் அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டமையுடன், இவற்றை இரண்டு வருடங்களுக்குள் இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் கல்விசார் புலமைப்பரிசில்களைப் பெறுவதற்கும், ஊடக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இலகு கடன்கள் வழங்கப்படுவதாகவும், ஊடகவியலாளர்கள் சார்பில் நலன்புரி வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார். அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுக்கத் தயார் இல்லையென்றும், சகல தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

செய்திகளின் போது பயன்படுத்தப்படும் மொழியின் தரம் தொடர்பில் ஆராய வேண்டியிருப்பதாகவும், இதற்கான வழிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டமொன்று விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும், நெறிமுறை ஊடகம் பற்றிக் கற்பதற்கான ஊடக கல்லூரியொன்று அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஜெகத் பி. விஜேவீர தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் சில சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனவும், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு தலையீடு செய்யுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கோரிக்கைவிடுத்தார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊடகத்துறை அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்குத் தெரியப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனைக் குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டார்.

தபால் துறையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவது மற்றும் கடிதங்களை விநியோகிப்பதில் காணப்படும் பிரச்சினைகள் பற்றியும் இங்கு விவாதிக்கப்பட்டது. உப தபாலகங்களை புனரமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் அடுத்தவருடம் ஆரம்பிக்கப்படும் என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன இங்கு தெரிவித்தார்.

# வட இலங்கைக்கு...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வளிமண்டலவியல் திணைக்களத்தின் படி இரண்டுதாழமுக்கங்களின் உருவாக்கம் எடுத்துக்காட்டப்பட்டது. தென்மேற்கு அராபியன் கடலில் 21 ஆம் திகதி உருவான ஆழமான தாழமுக்கம் ஒன்று மேற்கு, தென்மேற்குப் பக்கமாக ஆறு மணித்தியாலங்களாக 45 கிலோ மீற்றர் வேகத்தில் நகரத் தொடங்கியது. இது 'கற்றி' எனப்படும் சூறாவளியாகச் செறிவடைந்து 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்மேற்கு அராபியன் கடலில் மையம் கொண்டிருக்கும் இப்புயல் 23 ஆம் திகதி திங்கட்கிழமையன்று சோமாலியக் கரையைக் கடக்கும் எனக் கூறப்பட்டது. செய்மதிப் படிமத்தில் இதனை அவதானிக்கலாம். காற்றின் வேகம் மணிக்கு 100 - 110 கிலோ மீற்றராக இருக்கும். சூறாவளியின் தோற்றப்பாடு இந்தியக் கரைகளுக்கு அப்பால் அமைந்திருப்பதனால் மோசமான வானிலைத் தாக்கங்கள் எதுவும் இந்தியாவிற்கு ஏற்படமாட்டாது.

இதேபோன்று, மேல் வளிமண்டல சுற்றோட்டங்களின் காரணமாக இலங்கைக்குக் கிழக்காகவும் தாழமுக்கப் பகுதியொன்று உருவாகியது. வங்காள விரிகுடாவில் அமுக்க இறக்கமாகச் செறிவடைந்து நவம்பர் 25 ஆம் திகதி தமிழ்நாட்டுக் கரையை நோக்கி மேற்கு, வடமேற்காக நகரும் என இந்திய வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. சென்னைக்குக் கிழக்காக 100 கிலோ மீற்றர் தூரத்தில் இது அமைந்துள்ளது. இதற்கு 'நிவர்' சூறாவளி எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. நிவர் என்பது 'வெளிச்சம்' எனப் பொருள்படும். ஈரானினால் இப் பெயர் வழங்கப்பட்டது.

2020 நவம்பர் 24, 25 அம் திகதிகளில் தமிழ்நாட்டில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் 25, 26 ஆம் திகதிகளில் ராயல்சீமா மற்றும் ஆந்திரப் பிரதேச தென் மாவட்டங்களிலும் 26 ஆம் திகதி தெலுங்கானாவிலும் மழைவீழ்ச்சி மிகக் கடுமையாக இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே 22 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரை மன்னார் குடா, புதுச்சேரி, தென் ஆந்திரப் பிரதேசங்களில் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. அத்துடன் நவம்பர் 25 ஆம் திகதி தமிழகத்தில் சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிவர் புயலின் காரணமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். புயல் வடமேற்கு நோக்கி இலங்கைப் பக்கமாக நகருவதனால் வட இலங்கைக்குப் பாதிப்புக்கள் இருக்கும். நவம்பர் 23 ஆம் திகதி முதல் தமிழ்நாட்டில் பரவலாக சென்னை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, கடலூர் போன்ற பகுதிகளில் மழைவீழ்ச்சி கடுமையாக இருக்கும். நிவர் சூறாவளி நவம்பர் 25 ஆம் திகதி புதன் கிழமையன்று தமிழ்நாட்டுக் கரையில் காரைக்கால், மகாவலிபுரம் ஆகியவற்றினைக் கடக்கும் எனக் கருதப்படுகின்றது. பிராந்திய வானிலை அலுவலரின் தகவலின் படி தாழமுக்கம் சென்னைக்குத் தெற்காக 740 கிலோ மீற்றரில் மையம் கொண்டுள்ளது. கடலூர், சிதம்பரம் ஆகிய மாவட்டங்களுக்கு ஆறு தேசிய அனர்த்த மீட்புப் படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிவர் சூறாவளியின் காரணமாக வட இலங்கைக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வளிமண்டலத் திணைக்களம் வழங்கி உள்ள தகவலின்படி 100 - 150 மில்லி மீற்றர் மழை வட பகுதியின் பல இடங்களிலும் ஏற்படக் கூடும். செவ்வாய்க் கிழமையும், புதன் கிழமையும் சில சில இடங்களில் 150 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. புத்தளம் தொடக்கம் மன்னார் உள்ளடங்கலாக காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

# நெடுந்தீவு பிரதேச செயலகப் பணியாளர்களின் தினசரிப் போக்குவரத்துக்கு வழி செய்யுங்கள்!

## யாழ். மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,நவ.25

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பணிபுரியும் 50 உத்தியோகத்தர்களின் நிரந்தர பயணத்திற்கு ஏற்ற ஏற்பாடுகளை ஒழுங்கமைக்குமாறு யாழ. மாவட்டச் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிகட்டுவான் இறங்குதுறையில் இருந்து நெடுந்தீவு நோக்கிப் பயணிக்கும் படகு சேவையில் குமுதினிப் படகே காலை 6 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்படுகிறது.

அது குறிகட்டுவானுக்கு வந்து மீண்டும் காலை 8 மணிக்கு நெடுந்தீவு நோக்கி பயணிக்கும் சமயம் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களும் அதில் பயணிப்பது வழமையாகவுள்ளது.

வழமையாக 300 பேர் பயணித்த குமுதினிப் படகில் தற்போது கொரோனா அச்சம் காரணமாக 60 பேரை மட்டுமே அனுமதிக்க அறிவுறுத்தப்பட்டதனால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை அரச பணியாளர்கள் பயணிக்கும் பஸ் 8 மணிக்கு முன்பு குறிகட்டுவான் கரையை அடைந்தபோதும் அதற்கும் முன்பே படகு நெடுந்தீவுக்குப் புறப்பட்டு விட்டிருந்தது. இதனால் 35ற்கும் மேற்பட்ட பணியாளர்கள் நெடுந்தீவு செல்ல முடியாது, திரும்பி யாழ். மாவட்டச் செயலகத்திற்கு சென்றுள்ளனர்.

தமது பயணித்திற்கு ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

படகு சேவைக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது , கொரோனா அச்சத்தால் 60 பேரை மட்டுமே ஏற்ற வேண்டும் என்பது சுகாதாரத் திணைக்களத்தின் கண்டிப்பான அறிவுரை. காலை 7.30 மணிக்கே 60 இற்கும் மிஞ்சிய பயணிகள் படகில் ஏறி விட்டனர். இதற்கும் மேலதிகமாக காத்திருந்தாலும் புதிதாக ஒருவரையும் ஏற்ற முடியாது என்ற காரணத்தால் படகு புறப்பட்டது.- எனப் பதிலளிக்கப்பட்டது.

குறித்த பயணிகள் எண்ணிக்கையை 80 ஆக அதிகரிக்க முடியும், அதற்கு சுகாதாரத் துறையின் அனுமதிக்குக் காத்திருப்பதாகவும் பதிலளிக்கப்பட்டது.

மேற்படி விடயங்கள் தொடர்பில் மாவட்டச. செயலாளர் க.மகேசனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது -

இந்த விடயம் உடனடியாக ஆளுநர் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதாவது குமுதினிக்கு அப்பால் சங்கத்தின் படகில் அரச பணியாளரை மட்டும் ஏற்றுவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ள ஒழுங்குகளைச் செய்யக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் பதிலளித்தார்.

இது தொடர்பில் சங்கத்திடம் வினாவியபோது -

எமது படகு சேவையில் மூவர் பணியாற்றும் நிலையில் அவர்களிற்கான சம்பளம், எரிபொருள் செலவு, படகு பராமரிப்பு போன்றவற்றுக்கு உரிய நிதி தேவை. 60 பயணிகள் எனில் ஒரு வழிக்கு கட்டணம்4,800 ரூபா. இரு வழிக்கும் 9 ஆயிரத்து 600 ரூபா. இது செலவினத்தை ஈடுகட்ட போதுமானதல்ல.- என்று தெரிவித்தனர்.

## கடலாமையை இறைச்சியாக்கிய இருவர் ஊர்காவற்றுறையில் கைது





**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைப் பகுதியில் கடல் ஆமை ஒன்றை இறைச்சி ஆக்கிய இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இருவரும் ஆமை இறைச்சியுடன் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் சான்றுப் பொருள்களுடன் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஒப்படைக்கப்பட்ட இருவரும் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஊடாக சட்ட நட்வடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

## நினைவேந்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜே.வி.பியினர் தெற்கில் நினைவுகூருகின்றனர். ஆனால், வடக்கு, கிழக்கில் உயிரிழந்த தமிழ் போராளிகளையும், தமிழ் பொதுமக்களையும் நினைவுகூர முடியாது எனக் கோட்டா அரசு தடை போடுகின்றது. இப்படி ஒவ்வொரு மாகாணங்களுக்கும், வெவ்வேறு சட்டங்களைப் போடும் இதே அரசுதான் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்றும் கோமாளித்தனமாகச் சொல்கின்றது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு மனோ கணேசன் எம்.பி. வழங்கியுள்ள நேர்காணலில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

தொகுப்பாளர்:- நீங்கள் அண்மையில் தமிழ் ஊடகமொன்றுக்கு,'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பது கேலிக்குரிய விடயமாக இருக்கின்றது என கூறியிருந்தீர்கள். அதாவது ஆயுதம் ஏந்தியவர்களை நினைவுகூருவதை நியாயப்படுத்த முயல்வது போலவே அது தோன்றியது. என்ன கதை இது?

மனோ கணேசன்: - நான் எனது Twitter மற்றும் Facebook ஊடாக இந்த கருத்தினை பதிவேற்றியிருந்தேன். அது தமிழ் மற்றும் சிங்கள ஊடகங்களிலும் பிரசுரிக்கப்படுகின்றது. நான் சொல்ல முயல்வது இதுதான். அதாவது இந்த நாட்டில் போரால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் பிரச்சினை, வடக்குக்கு தெற்குக்கும் இடையில் இருந்து வருகின்றது. இது ஒரு புதிய பிரச்சினையல்ல.

பாருங்கள், பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் யார்? தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசுக்கு எதிராக ஆயுதங்கள் ஏந்திப் போராட்டங்களை மேற்கொள்பவர்கள்தான் பயங்கரவாதிகள் எனக் கூறப்படுகிறார்கள். இது பற்றிய எளிமையான விளக்கம் அவ்வளவுதான்.

நாம் இப்படிப் பார்க்கின்றபோது, 1971, 1989ஆம் ஆண்டுகளில் ஆயுதம் ஏந்திய ஜே.வி.பியினர் பயங்கரவாதிகள். தமிழீழ விடுதலைப்புலிகளும் பயங்கரவாதிகள். இன்று அமைச்சுப் பதவி வகிக்கும் டக்ளஸ் தேவானந்தவின் ஈ.பி.டி.பி. மற்றும் ரெலோ, புளொட் ஆகிய அமைப்புகளும் பயங்கரவாத அமைப்புகளாகத் தான் செயற்பட்டுள்ளன.

ஆனால், இப்போதுள்ள கேள்வி, ஜே.வி.பி. இன்று தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல. அதன் தடை இப்போது நீக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இன்னும் தடையுள்ளது. அதனால், வடக்கில் போரின்போது உயிரிழந்த போராளிகளாக இருக்கட்டும், பொது மக்களாக இருக்கட்டும் அவர்களை, தமிழீழ விடுதலைப்புலிகளின் பெயரைப் பயன்படுத்தி நினைவு கூருவது சட்ட விரோதமானது என அரசாக இருக்கட்டும், அல்லது தெற்கில் யாராவது கூறினால் அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆனால், இதனை ஒரு காரணமாகக் கொண்டு உயிரிழந்தவர்களை நினைவு கூருவதை நிறுத்துவது என்பது அநீதியானது, பிழையானது, மனிதாபிமானமற்றது என நான் நினைக்கிறேன்.

தொகுப்பாளர்:- ஆனால், பிரபல நாடுகளில், அதாவது போர் நடைபெறுகின்ற நாடுகளில், உதாரணமாக தலிபான் இயக்கங்களை நினைவு கூருவதற்கு இடமளிப்பதில்லையே?

மனோ கணேசன்: (உடனே இடைமறித்து) அப்போது எவ்வாறு தெற்கில் ஜே.வி.பி. நினைவு கூருகின்றது?

தொகுப்பாளர்:-ஜே.வி.பிக்கு நினைவு கூர இடமளிக்கப்படுகின்றதா?

மனோ கணேசன்:- வருடந்தோறும் நினைவு கூருகின்றனர். ஏன் இல்லை? உங்களுக்குத் தெரியாதா?

1971இல் உயிரிழந்தவர்களை ஏப்ரல் மாதத்தில் 'விரூ தின' என்றும், அதேபோல் 1989இல் உயிரிழந்தவர்களை நவம்பர் மாதத்தில் 'இல் தின' எனவும், ஜே.வி.பியினர் நினைவு கூருகின்றனர்.

தொகுப்பாளர்:- ஆம். ஆம். ஜே.வி.பியினர் மாவீரர்களை நினைவு கூருகின்றனர்தாம்.

மனோ கணேசன்:- இவர்கள் பிரசித்தமாக நாட்டில், கொழும்பு தலைநகரில், மேடை அமைத்து, பொஸ்டர்களை ஓட்டி, பாதயாத்திரைகளை நடத்தி, ரோஹண விஜயவீர மற்றும் உபதிஸ்ஷ கமநாயக்க ஆகியோரை நினைவுகூருகின்றனர்

தொகுப்பாளர்:-அப்போது நீங்கள் அந்த அந்தஸ்துக்கு தமிழீழ விடுத லைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் வைக்கின்றீர்களா?

மனோ கனேசன்:- நான் ஜே.வி.பியின் ஆயுதக் கொள்கையை ஏற்றுகொள்பவன் அல்லன். நான் இந்த நாட்டின் பிரச்சினைகளை ஒருபோதும் ஆயுதம் ஏந்தி தீர்க்க முடியும் என்ற நிலைப்பாட்டில் உள்ளவன் அல்லன்.

பேச்சுவார்த்தை, கலந்துரையாடல். வேறு வழிமுறைகள் இல்லை.

அப்போது நான் எப்படி ஜே.வி.பியின் ஆயுதக் கொள்கையை ஏற்றுக்கொள்வது? நான் எப்படி வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆயுதக் கொள்கையை ஏற்றுக் கொள்வது? முடியாதுதானே! ஆயுதப் போராட்டம் வேண்டாம்! சண்டையிட வேண்டாம்! அடித்துகொள்ள வேண்டாம்! சாகடிக்க வேண்டாம்!

அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றாலும், உயிரிழந்தவர்களை நினைவு கூர வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

அது எங்களுக்கு இல்லை. ஆனால், அது ஜே.வி.பிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றே ஒன்று, ஜே.வி.பியின் தடை இப்போது நீக்கப்பட்டுள்ளது.

ஆனால், சிலர், ஜேவிபியினர் பயங்கரவாதிகள் அல்லர், அவர்கள் கலகக்காரர்கள், ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்ரவாதிகள் என்று கூற முயல்கின்றனர்.

அதை நான் ஏற்க மாட்டேன். இதைத் தங்கள் தேவைகளுக்காகச் சொல்கின்றனர். அதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதில் பாரபட்சம் உள்ளது.

தொகுப்பாளர்:- அப்படியென்றால் இரு சாராரினதும் நோக்குகள் ஒன்றா?

மனோ கணேசன்:- ஒன்றாகும்! ஒன்றாகும்!

ஆயுதப் போராட்டம் என்பது, ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஆகும். தமிழீழ விடுதலைப்புலிகளின் நோக்கம் வடக்கு, கிழக்கில் வேறொரு நாட்டை உருவாக்குவது என்று சொல்கின்றார்கள்.

1971, 1989களில் தெற்கில் சில பிரதேசங்களை ஜே.வி.பியினர் பிடித்து தம்வசம் வைத்திருந்தனர். உங்களுக்குத் தெரியுமாயிருக்க வேண்டும். அப்பிரதேசங்களை அவர்கள் ஆட்சி செய்தார்கள். அந்தக் கிராமங்களில் அவர்களது நீதி மன்றங்களை நடத்தினர். தெரியும்தானே!

தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் தமிழ் அமைப்புகள், வடக்கையும் கிழக்கை மட்டும் ஆக்கிரமிக்க முயன்றனர். ஆனால், ஜே.வி.பினர் முழு நாட்டையும் பிடிக்க முற்பட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் ஆயுதம் ஏந்திய ஏனைய தமிழ் அமைப்புகளுக்கும் இடையிலும், ஜே.வி.பிக்கு இடையிலும் கொள்கை வித்தியாசங்கள் உள்ளன. அதை நான் இல்லை என்று சொல்லவில்லை.

ஆனால், அதைக் காரணமாகக் கொண்டு, தமிழ் அமைப்புகள் பயங்கரவாதிகள். ஜே.வி.பியினர் கௌதம புத்தர்கள் என்று சொல்ல முயல்வதை நான் ஒருபோதும் ஏற்க மாட்டேன்.

எல்லோருமே ஆயுதங்களை ஏந்தித்தான் போராட்டங்களை செய்தனர். அதிலிருந்துதான் என் கொள்கை நிலைப்பாட்டை நான் ஆரம்பிக்கிறேன்.

ஆயுத அமைப்புகளின் போக்கினை நான் ஏற்றுகொள்வதும் இல்லை, அதை சரியென நான் சொல்வதும் இல்லை. அங்கீகரிப்பதும் இல்லை. ஆனால், அவர்கள் உயிரிழந்தனர்.

அதனால் அவர்களின் தாய், தந்தை, மனைவிமார்களுக்கு. பிள்ளைகளுக்கு தமது பிள்ளைகளை, கணவர்மார்களை, பெரியோரை, உறவினர்களை, நினைவு கூர இடமளிக்கப்பட வேண்டும். இது இவ்வுலகில் யாருக்கும் இருக்க வேண்டிய உரிமை.

அதனால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு தடை செய்யப்பட இயக்கம் என்பதால் அந்தத் தடை என்றாவது ஒருநாள் நீக்கப்பட முடியும். அதுவரை அந்த அமைப்பின் பெயர் குறிப்பிடாமல், அவர்களது கொள்கைகளை பற்றிப் பேசாமல், இறந்தோரை நினைவுகூர அவர்களுக்கு இடமளிக்கபட வேண்டும்.- என்றார்.

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதிகள் இல்லை. போதைப்பொருள் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணைகளே துரிதப் படுத்தப்படவுள்ளன.

சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 2 கிராமுக்கும் குறைவான ஹெரோயினை வைத்திருந்த குற்றச்சாட்டுகள் மற்றும் 5 கிலோ கிராமுக்கு குறைவான கஞ்சா கடத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வழக்கு விசாரணைகளே இவ்வாறு துரிதப்படுத்தப்படவுள்ளன.

அவர்களின் தகவல்கள் அடங்கிய அறிக்கை நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு குறப்பிட்டுள்ளது.

இந்த விடயம் மற்றும் சிறைச்சாலைகளில் காணப்படும் இடநெருக்கடி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நேற்று கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கு இடையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

## மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கு:

# பிள்ளையானுக்குப் பிணை!

## ஏனைய 5 சந்தேகநபர்களும் விடுவிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந் தன் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், பிள்ளையான் எனப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திர காந்தன் சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தார்.

பிள்ளையானுக்குப் பிணை வழங்க சட்டமா அதிபர் ஒப் புதல் அளித்ததன் பின்னரே நேற்று பிணை வழங்கப்பட்டுள் ளது.

அத்துடன், குறித்த வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஏனைய ஐவருக்கும் பிணை வழங்கப் பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு நத்தார் ஆராத னையின்போது, மட் டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப் பட்டார்.

இதையடுத்து, ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப் பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப் படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தரான எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க ஆகியோர் சந்தேகத்தின் பேரில் 2015 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து தடுத்துவைக்கப் பட்டிருந் தனர்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பிள்ளையான் நாடாளுமன்றுக்கு தெரிவுசெய்யப்பட்டமையைத் தொடர்ந்து, விடுதலைக்கான கோரிக்கையை அவரே நாடாளுமன்றத்தில் முன்வைத்து வந்தார். இந்தநிலையில், மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் பிள் ளையான் உள்ளிட்ட 6 சந்தேகநபர்கள் இன்று முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போது இவர்கள் அனைவரும் சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள் ளனர். இவர்களுக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட் டிருந்த பிள்ளை யானுக்கும் அவரின் சகாக்களுக்கும் பிணை வழங்க முடியுமாயின், குறித்த சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ள ஏனையோரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் மனைவி சார்பில் மட் டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி யிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த வழக்கில் பிள்ளையானுக்கு எதிரான குற்றச் சாட்டுக் களை விலக்கிக் கொள் வதா என்பது பற்றிய முடிவை சட்டமா அதிபர் தரப்பு இரண்டுவார காலத் தில் நீதிமன்றுக்கு தெரிவிக் கும் என மன்றில் கூறப் பட்டது.

## கிளிநொச்சியில் பல பகுதிகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.25

கிளிநொச்சியில் திருவையாற்றைத் தொடர்ந்து பாரதிபுரம், கிருஷ்ணபுரம் பகுதி யிலும் 27 பேர் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

திருவையாறில் இடம்பெற்ற மரண வீட்டிற்கு கொழும்பில் இருந்து வந்த ஒரு வரால் 43 குடும்பங்களைச் சேர்ந்த 169 பேர் தனிமைப்படுத்தப்பட்டமையோடு மேலும் பலரை தேடும் முயற்சி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் முன்னெ டுக்கப்பட்டது.

இந்த நிலையில் காய்ச்சல் காரண மாக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவரிற்கு கொரோனா உறுதி செய்யப்பட் டதனையடுத்து தற்போது மேலும் 8 குடும் பங்களைச் சேர்ந்த 27 பேர் தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட அனை வரிற்கும் நேற்று பி.சி.ஆர். பரிசோதனை கள் இடம்பெற்ற நிலையில் இதன்பெறு பேறுகள் நேற்று இரவு தெரிய வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

## 27 இலங்கையர்கள் ரஷ்யாவில் கைது

போலித் தகவல் வழங்கி ரஷ்யா சென்ற 27 இலங்கையர்கள் அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் இந்த வருடம் ரஷ்ய நாட்டிற்கு சென்ற இலங் கையர்களாவர். இந்த 27 பேரில் 17 பேர் தற்போது சிறைத் தண்டனையை நிறைவு செய்துள்ளனர்.

அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் மேலும் 10 பேர் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள் ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 பேருக்கு எதிராக சட்ட ரீதியான நட வடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை யினால் அவர்கள் பல்வேறு நகரங்களில் உள்ள தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## பொல்லால் அடித்து ஒருவர் கொலை தணமல்விலவில் குழு மோதல் சம்பவம்

தணமல்வில பகுதியில் இரு குழுக்க ளுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தணமல்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊவ குடாவோயா பகுதியில் கடந்த ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்ற மோதலின் போதே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தின் போது இரு குழுக்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளதுடன், அதில் ஒருவருக்கு பொல்லால் தாக்கியுள்ள னர்.

இந்த மோதல் தொடர்பில் 119 என்ற அவசர அழைப்பு பிரிவுக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், பின்னர் தண மல்வில பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதன்போது படுகாயமடைந்திருந்த நபரை, பொலிஸ் நடமாடும் சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் தணமல்வில வைத்தி யசாலையில் சேர்த்துள்ளனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவரை அம்பாந் தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றி அனுப்பும் போது அவர் உயிரிழந்துள்ளார்.

தணமல்வில பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை யுடன், அவர்களைக் கைது செய்வதற்காக தணமல்வில பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.


# கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை



**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1990.09.10
மதம் - இந்து V
நட்சத்திரம் - கார்த்திகை
பாவம் - 15
செவ் - 08இல்
கல்வி - பொறியியலாளர் (Engineer) மொரட்டுவ
தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி உத்தியோகப் பெண் தேவை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1987.09.14
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரோனி
பாவம் - 33 1/2
சூ/செவ் - 10இல்
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியை
எதிர்பார்ப்பு - சூ/ செவ்வாய் உள்ள பட்டதாரி உத்தியோகம் தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம் முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற் கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


## பிள்ளைக்கு ஏணை கட்ட முயன்ற தந்தை பரிதாப சாவு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இருட்டுமடு பகுதி யில் பிறந்த தனது குழந்தைக்கு ஏணை கட்டுவதற்காக வீட்டிற்கு மேல் ஏறிய குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலை யில் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இருட்டு மடுவினை சேர்ந்த 36 வயதுடைய இராமசாமி மோகன்றாஜ் என்ற மூன்று பிள் ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ள சம்பவம் கிராம மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள் ளது.

குழந்தை பிறந்து பத்து நாள் கள் கூட ஆகாத நிலையில் ஏணை கட்ட ஏறியபோது இந்த அனர்த் தம் இடம்பெற்றுள்ளது இதனால் கிராமமே சோகத்தில் ஆழ்ந்துள்ளது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir